
விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 08 ஞாயிற்றுக்கிழமை (24.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 340

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT


## பிரதமர் ரணில் - ஆலோசகர் பாலா இன்று நோர்வேயில் சந்திப்பர்



(ஒஸ்லோ)

ஒஸ்லோ சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை இன்று மாலை நோர்வே நேரப்படி 5 மணிக்கு சந்தித்துப் பேசவுள்ளார்.

நோர்வேயில் நடைபெறவுள்ள அரசு விடுதலைப்புலிகளின் சமாதானப் பேச்சின் முதலாம் கட்ட மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும், அப் பேச்சுவார்த்தையின் போது அரசியல் தீர்வு குறித்த விடயங்கள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் அன்ரன் பாலசிங்கத்துடன் ஆராயவுள்ளதாக நோர்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



இதேவேளை ஒஸ்லோவில் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா (10ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் போராட்டம் 8வது நாளாக தொடர்கிறது

### பல்கலை மாணவர்களுக்கு அனுமதி மறுப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் முகாமிட்டிருக்கும் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக நேற்று 8வது நாளாகவும் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றது.

அத்துடன் சுழற்சி முறையில் அப்பகுதி மக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் காரணமாக நெடுந்தீவுப் பொதுச்சேவைகள் அனைத்தும் முடங்கியிருப்பதால் அங்கு மக்கள் உணவுப் பொருட்கள் உட்பட பாவனைப்பொருட்களை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

போராட்டம் காரணமாக தொடர்ந்தும் அப்பகுதியில் பதற்றமான ஒரு நிலைமையே காணப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை உணவுப் பொருட்களுடன் நேற்று இரண்டாவது நாளாகவும் நெடுந்தீவுக்குச் செல்ல முற்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் அங்கு செல்வதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவர்கள் அனைவரும் குறிகட்டுவான் வரை சென்று திரும்பியுள்ளனர். (இ -6-43)

# நெடுந்தீவுச் சம்பவத்தில் இராணுவம் தலையிடாது

## நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை

# அதியுயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படவும் மாட்டாது!

### யாழ். இராணுவத் தளபதி அறிவிப்பு

(நமது நிருபர்)

**நிரந்தர சமாதானம் ஏற்பட்டு, மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை யாழ் குடாநாட்டில் அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது. தற்போது நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள அரசியல்நெருக்கடி நிலையில் இராணுவம் ஒருபோதும் தலையிடமாட்டாது. இவ்வாறு யாழ் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

யாழ்பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உள

தெரிவிக்கையில்:-

யாழ் குடாநாட்டில் தற்போது

எவ்வித மாற்றங்களும் ஏற்படமாட்டாது.

**நிரந்தர சமாதானம் ஏற்பட**

## கனடிய தூதுக்குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

கனேடிய உயர் மட்டத் தூதுக்குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று வன்னியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை

நண்பகல் 12மணிவரை சுமார் இரண்டுமணித்தியாலங்கள் இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாகவும், கனேடிய அரசு மேற்கொண்டு வரும் தொண்டு

யாழ்பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உள நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ் குடாநாட்டில் தற்போது 27 ஆயிரம் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை தற்போதுள்ள இராணுவ நிலைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படமாட்டாது.

**நிரந்தர சமாதானம் ஏற்பட சில காலம் பிடிக்கும்**

நாட்டில் நிரந்தரமான சமாதானம்

(10ம் பக்கம் பார்க்க)

...நேற்று வன்னியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 10.00மணி முதல்

...மேற்கொண்டு வரும் தொண்டு அடிப்படையிலான உதவிகள் தொடர்

(10ம் பக்கம் பார்க்க)

# கொடிகாமத்தில் கிரனெட் வீச்சு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயம்

## நேற்று இரவு வேளை இனந்தெரியாதோர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதோர் வீட்டில் புகுந்து நடத்திய கிரனெட் தாக்குதலினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 8.15 மணியளவில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில உள்ள வீடொன்றில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப வீட்டினுள் தீடீரென புகுந்த இனந்தெரியாதோர சிலர அறைக்குள் இருந்தவர்களை இலக்கு வைத்து கிரனெட்டை வீசி விட்டு தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்டுகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழில் 2 ஆயிரம் பேருக்கு மீட்பு நிதி மீளளிக்கப்பட்டது

(திருநெல்வேலி)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாயிரம் பேருக்கு கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நேற்று வரை தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிக்கப்பட்டுள்ளது.

பளையில் இடம்பெற்ற இம் மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு நிகழ்வில் தமிழீழ நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி உதவி நிதிப்பொறுப்பாளர் தமிழ் மாறன் மற்றும் நிதித்துறையைச் சேர்ந்த தமிழ்க்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ மீட்பு நிதியாக 10 ஆயிரம் ரூபா செலுத்தியவர்களுக்கு 15ஆயிரத்து 350 ரூபாவும் 16 கிராம் பவுண வழங்கியவர்களுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு உதவும் "ஒஸ்லோ" மாநாடு நாளை

(நமது நிருபர்)

முப்பத்தொன்பது நாடுகள் பங்கு கொள்ளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒஸ்லோ மாநாடு நாளை ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பமாகவுள்ள இம மாநாட்டில் முதற்தடவையாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள்.

இரணடு தசாப்தங்களாக இடம பெற்ற யுத்தத்தினால் பாதிப்படைந்த இலங்கைக்கு, குறிப்பாக வடக்குகிழக்கு புனர்நிர்மாண வேலைகளுக்கு நிதி வழங்குவது

(10ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் மீளக்குடியமர அனுமதி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கொட்டடிப்பகுதி உட்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் குடியமர்த்தப் படைத்தரப்பு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(10ம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவிற்கான படகு சேவையை ஈ.பி.டி.பி நாளை ஆரம்பிக்குமாம்!

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி அமைப்பின் ஏற்பாட்டில் நெடுந்தீவிற்கான விசேட ப்டகு சேவை ஒன்று நாளை காலை 9.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி அமைப்பினருக்கு எதிராக இடம் பெற்று வருகின்ற போராட்டத்தை அடுத்து நெடுந்தீவிற்கான படகுச் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நெடுந்தீவைச் சேர்ந்த பலர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து மீண்டும் அங்கு செல்ல முடியாமல் இருப்பதாகவும்,

இம் மக்களை நெடுந்தீவிற்கு

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆங்கிலத்தில் சுலபமாக கதைக்கப்பயில, ஆரம்ப அறிவில் இருந்து 25வயதிற்குமேற்பட்டவர்க்கு தனிப் பிரிவு ந விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்: நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (6227)


## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் இளைஞர்களுக்கான அபிவிருத்தி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-9, 54)

# ஒஸ்லோ மாநாட்டில் பெறும் நிதி மூலம்

# 10 இலட்சம் பேர் மீளக் குடியமர்த்தப்படுவர்

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

நோர் வேத் தலைநகர் ஒஸ்லோவில் நாளை இடம்பெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்மாநாட்டில் கடந்த 20 வருடகால யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்கே முக்கியமாக உதவி பெறப்படும் என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

அவர் இம்மாநாடு தொடர்பாக தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்; நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு இன்னும் சிலவருடங்கள் எடுக்கும்.

சுமார் 20 நாடுகள் கலந்து கொள்விருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில், யுத்தத்தினால்பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குஉதவுவதுமுதல் வீதிகளைபுனரமைப்பதுவரையான பல்வேறுவிடயங்களுக்கு நிதி பெறப்படும்.

எனினும், இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் பணம்பெறுவதல்ல எனத் தெரிவித்த விடார் ஹெல்கீசன் இலங்கைக்கு ஆதரவாக நடைபெறும் முதலாவது அரசியல் மட்ட மாநாடு இதுவென்பதே இங்கு முக்கியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

இங்கு பெறப்படும் நிதி மூலம் இடம் பெயர்ந்த சுமார் 10 இலட்சம் பேரை மீண்டும் குடியமர்த்துவதுடன் பல்வேறு பிரதேசங்களிலும் புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணிவெடிகளும் அகற்றப்படவுள்ளன.

அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார்3 இலட்சம் சிறுவர்களுக்குவிசேடசுகாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன என்றார்.

இதேவேளை, நாட்டின் சமாதானமுயற்சிகளின்போது நோர்வே அரசு, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றது என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் குற்றச் சாட்டையும் ஹெல்கீசன் இச்சந்தர்ப்பத்தில் நிராகரித்துள்ளார். (உ-8

# வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர

# உலக வங்கி 4 கோடி 30 லட்சம் டொலர் உதவி

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு உலக வங்கி 3 கோடி 10 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

அவசர புனரமைப்புத்திட்ட நடவடிக்கையின் கீழ் அடிப்படைச் சுகாதார வசதிகளை அமைத்தல் நகர்ப்புற நீர் விநியோகத் திட்டம் மீள் குடியேற்றப்படவுள்ள குடும்பங்களுக்கு வருமான வாய்ப்பையும் வேலை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியன இந்நிதி மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

வடக்கு- கிழக்கில் வாழும் மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களுக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் நிதி உதவி மூலம் மேற்கொள்ளப்படவிருக்கும் மேற்படி திட்ட நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாணசபை நிர்வகிக்கவுள்ளது.

யுத்தம் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடைநிறுத்தப்பட்டிருந்த சட்ட நீதிச் சேவை மற்றும் கல்விப் புனர்நிர்மாணத்திட்டங்களுக்கென மேலும் ஒருகோடி 20 லட்சம் அமெரிக்க டொலரையும் உலக வங்கி வழங்கவுள்ளது. (உ-8)

## இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளை கணனி மயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை, எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் கணனி மயப்படுத்தப்பட்ட சேவையை மக்களுக்கு வழங்கவுள்ளது.

இதன் மூலம் வாடிக்கையாளர் நன்மையடைவதுடன், வங்கி நடவடிக்கைகளும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (உ-7)


## வலம்புரியின்

ஆதரவுடன் நடத்தும்

மூத்த பத்திரிகையாளர்

## அமரர் சி. செல்லத்துரை

(வீரகேசரி) அவர்களின்

ஞாபகார்த்த

## சிறுகதைப் போட்டி

பரிசில்கள்

**முதலாம் பரிசு:** ரூபா 2000 உம் விருதும்
**இரண்டாம் பரிசு:** ரூபா 1000 உம் விருதும்
**மூன்றாம் பரிசு:** ரூபா 500 உம் விருதும் வழங்கப்படும்

தரமான சிறு கதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### போட்டி விதிகள்

- கதைகள் நாட்டின் சமகாலச் சூழலைக் கருப் பொருளாகக் கொண்டு எழுதப்பட வேண்டும்.
- 500 - 600 சொற்களுக்குள் வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் எழுதப்படவேண்டும்.
- கதைகள் வேறு எந்த ஊடகங்களிலும் வெளிவராததாகவும், மொழி பெயர்ப்போ, தழுவுதலோ அற்றதாகவும் இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியில் வாழ்பவரும் வயது, பால் வேறுபாடின்றி பங்குபற்றலாம்.
- ஒருவர் ஆகக்கூடியது இரு ஆக்கங்களை போட்டிக்கு அனுப்ப முடியும்.
- போட்டியில் கலந்துகொள்ளுபவர், தனது சொந்தக் கதை என்பதை உறுதிப்படுத்துவதுடன், முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றைப் பிறிதொரு தாளில் எழுதிக் கதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- சிறுகதைகள் யாவும் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி வலம்புரி, 15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10-12-2002 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
- வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வலம்புரியின் 3-ம் ஆண்டு நிறைவு விழாவில் இடம் பெறும்.

குறிப்பு:- நடுவர் குழுவினரால் தெரிவு செய்யப்படும் சிறுகதைகள வலம்புரியின் வாரமலர் சங்குநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

- ஆசிரியர்


# சமுர்த்தி வங்கியாளர்களாக

# யாழில் 79 பேர் தெரிவாகினர்

## எம்பிலிப்பிட்டியாவில் 7 நாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இயங்குவுள்ள சமுர்த்தி வங்கிகளுக்கு வங்கியாளர்களை நியமிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் மொத்தமாக 79 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டோரிற்கான பயிற்சிகள் இம்மாதம் 27ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 3 ஆம் திகதிவரை எம்பிலிப் பிட்டியாவில் நடைபெறவுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி வங்கியாளர்களின் பெயர் விபரம் பின்வருமாறு:-

**யாழ்.பிரதேச செயலர் பிரிவு**

எஸ் சிறிகாந்தன், எஸ். ஜெயகணேசன், ஜீ.சித்திரகுமார், எஸ் சண்முகப்பிரியா பீ வினிதா, எ.சிறிஜெகன், எம்.காயத்திரி, ரி.கருணாகரன்.

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவு**

ஆர்.குகதாஸன்,எஸ் சுகந்தன், ஆர்.தர்மிலா, ரீ ராமநாதன், ஏ.அகிலன்.

**சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு**

எஸ் பானுமதி, ரீ.இந்திரகலா, பி விஜயகுமாரன், என்.நளினி, எஸ் சொரூப்நந்தன். எஸ்.ஜோர்ஜ் தர்சினி, பீ.பாமினி, ஆர்.நளினி

**கரவெட்டிபிரதேசசெயலர்பிரிவு**

எஸ்.சிறிகிருஷ்ணன், கே. பிரபாகரன், எம்.பார்வதி, என்.ஜெகதீஸ்வரன், ரீ.இராஜேஸ்வரி, கே.சிறீதரன், வீ. குருபன், எஸ்.வில்சன்ஜெரின்

**மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு**

பி.யசோதா, கே.பபிரஞ்சனா, ஏ. சுகந்தி, எஸ். மதியழகன், கே.சுதர்சினி,

**பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவு**

எஸ்.ஞானமுரளி,ஜீ சஜிதா என் சௌந்தரராஜா, பி. பாலசுப்பிரமணியம் ரி. சுமேதா.

**வேலணை பிரதேச செயலர் பிரிவு**

கே.பிரேமளாதேவி, கே. பஞ்சலிங்கம், கே. பிரபாகரன், யூ சுஜித்திரா கே. விஜேந்திரன், வீ முரளிதாஸ் எஸ்.சாரதாதேவி, ஆர்.ரட்ணபாலன்.

**தெல்லிப்பளை பிரதேசசெயலர் பிரிவு**

ஜே.சிவாஜினி, எம். ஜெயந்தி.ஏ யூலியட்சுகந்தினி ஈ பரமேஸ்வரி, மீ.சதீஸ்வரன் எஸ்.சுஜன்ஜா,

**கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

மீ.ராஜினி, ஆர்.விஜி குலமணி, வீ.கீதாஞ்சலி, கே.வேதநம்பி, ஏ.ரமணன், ரீ.பாலச்சந்திரன்.

**உடுவில் பிரதேச செயலர் பிரிவு**

ஆர்.கஜேந்திரன், ரீ.சுதா எம்.ேதீஸ்வரன், எஸ். தமிழ்ச்செல்வி, எஸ்.சுகந்தன், பீ.கலைமதி, எஸ். சுகன்ஜா.

**சங்கானைப் பிரதேச செயலர் பிரிவு**

கே.ரமேஷ், எல்.ஜெயப்பிரகாஸ், வீ சுரேந்திரன், ரீ.வடிவேல், ரீ.மைசூர்மதன் ரீ ரஞ்சன்.

**சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

ஜே எஸ். நிக்சன் டபிள்யூ பியந்தன், கே.கவிதா டி.எஸ். ஜெயக்குமார், ரீ.ரஜித்தா, எஸ்.ஜெயராஜ், ரீ.பாலமுரளி. (உ-10)

## மட்டு. - அம்பாறைக்கான

# தமிழீழ நீதிமன்றம் நேற்று திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான தமிழீழ நீதிமன்றம் நேற்று மட்டக்களப்பு பட்டிப்பளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, நீதியாளர் ஒப்பிலான் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 5ஆம் திகதி முதல் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழீழக் காவல்துறை விஸ்தரிக்கப்பட்டதை அடுத்தே தமிழீழ நீதிமன்றமும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்திற்கான நீதிமன்றம் எதிர்வரும் 2 ஆம் திகதி தம்பூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

(ந- 5)

மனிதாபிமானக் காரணங்களால்

# வேலை நிறுத்தப் போராட்டத்தில் யாழ். தாதியர் ஈடுபடவில்லை

(யாழ்ப்பாணம்)

சம்பள முரண்பாடு காரணமாக அரச தாதியர் தொழிற் சங்கம் நேற்றுமுதல் நாடளாவியரீதியில்மேற் கொண்டுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தில்யாழ் போதனாவைத்தியசாலைதாதிகள் இணைந்து கொள்ளவில்லை.

இதுகுறித்துபொது வைத்தியதாதிகள்சங்கத்தின் யாழ். கிளை நேற்றையதினம்பத்திரிகைக்குறிப்பொன்றினைவெளியிட்டுள்ளது.

அதில்குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

இன்றுமுதல் அகிலஇலங்கைரீதியில் தாதிமார் குதித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தில் மனிதாபிமானக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, யாழ்; போதனா வைத்தியசாலை தாதிகள் உடனடியாக கலந்துகொள்ள மாட்டார்கள்.

- உயிர் காக்கும் சிகிச்சைகளை அவசரத்திற்கு வழங்கக் கூடிய தனியார் வைத்திய வசதிகள் யாழ். மாவட்டத்தில் இல்லாமை
- மழைகால நிலைமைகளினால் அகதி முகாம் மக்கள் தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளமை
- உயிர்காக்கும் நடவடிக்கைகளுக்காக நோயாளர்கள் உடன் வேறு வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெறச் செல்வதில் காணப்படும் போக்குவரத்து ஒழுங்கீனம்
- வடமாகாணமக்களின் தற்போதைய நெருக்கடியான வாழ்க்கை நிலையில் எமது வேலைநிறுத்தப்போராட்டம் அவர்களின் உயிருக்கும் ஆரோக்கியத்திற்கும் பெரும் சவாலாக அமையும் ஆகிய மனிதாபிமான காரணங்களை மனதில்கொண்டுதாய்ச் சங்கத்தின் அனுசரணையுடன் இம் முடிவினை எடுத்துள்ளோம்.

எமதுகோரிக்கைகள்குறுகிய காலத்திற்குள் நிறைவேறாது போனால் தாய்ச் சங்கத்துடன் இணைந்து தொழிற் சங்கநடவடிக்கையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப் படுவோம் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# கேள்விகளுக்கு பதிலளிப்பது அமைச்சர்கள் கடமை

(கொழும்பு)

பாராளுமன்ற அவை நடவடிக்கைகளின் போது வாய் மூலப் பதில்கள் மற்றும் அங்கு எதிர்பார்க்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்க அமைச்சர்கள் கட்டாயம் சபையில் பிரசன்னமாயிருக்க வேண்டும் என சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மக்கள் சார்பில் எழும் பிரச்சினைகளை அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வருவது சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை ஆகும்.

மக்கள் சார் பிரச்சினை குறித்த கேள்விகள் பாராளுமன்றில் எழுப்பப்படும் போது சம்பந்தப்பட்டவர்கள் இல்லாவிட்டால் அது தொடர்பான மேலதிக கேள்விகளை கேட்கும் சந்தர்ப்பங்களை இழக்க நேரிடும்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் கேட்பதற்கு 7 கேள்விகளை முன் வைத்திருந்தாலும், கேள்வி கேட்கப்படும் அமைச்சரோ அன்றி உறுப்பினரோ சபையில் இல்லாத போது அக் கேள்விகளால் எதுவித பயனும் இல்லாமல் போய் விடுகிறது.

நிலையியற் கட்டளைகளின் அடிப்படைஅம்சமானகேள்வி, பதில் அமர்வு வெற்றி பெற வேண்டுமானால் இருதரப்பு உறுப்பினர்களும் சபையில் இருப்பது அவசியம் எனவும் சபாநாயகர் வலியுறுத்தியுள்ளார்.

(உ-8)

# விசேட அதிரடிப்படை முகாமை அகற்றுக

## க.கா. குழுவுக்கு மகஜர்

(கொழும்பு)

அம்பாறை மல்வத்த பிரதேசத்தில் உள்ள விசேட அதிரடிப் படை முகாமை அகற்றுமாறு கோரி, 142 தமிழ்ப் பொது மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று அம்பாறை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு இப்பகுதியில் அதிரடிப்படைமுகாம் அமைப்பதற்காக பொதுமக்களின் வீடுகள் பல சுவீகரிக்கப்பட்டன.

அம்பாறை பிரதேசத்தில் ஆலயம் பாடசாலை மற்றும் மருத்துவமனைகளைஅண்மித்ததாகவே இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளர்கள் இடத்திலேயே அகதிகளாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொது இடங்களை அண்டிய பிரதேசத்தில் முகாம் அமைக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வுஒப்பந்தத்திற்கு அமைய, இயல்பு நிலை ஏற்படுத்தும் சரத்தின் கீழ் அம்பாறை மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாம் அகற்றப்பட வேண்டும் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-8)

# சட்டமாணிக் கற்கை 19 பேர் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் திறந்த பல்கலைக் கழகத்தில் 2002/2003 கல்வி ஆண்டிற்கான சட்டமாணிக் கற்கை நெறிக்கு யாழ் மாவட்டத்தில் இருந்து 19 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கு 360 பேர் தோற்றியிருந்த போதிலும் 19 பேரே தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விபரங்கள் பின்வருமாறு;

நா.இராசரத்தினம் (யாழ்ப்பாணம்), வே. பரிமேலழகப்பிள்ளை (நீர்வேலி), சி. நிரஞ்சினி (யாழ்ப்பாணம்). கெ.சிறிதயானந்தி (மானிப்பாய்), ரி.சறோஜா (யாழ்ப்பாணம்), ந. வனிதா (யாழ்ப்பாணம்), சீவரட்ணம் (யாழ்ப்பாணம்), நவரட்ணம் (கரவெட்டி), லக்ஷதன் (யாழ்ப்பாணம்), தாட்சாயிணி (நீர்வேலி), பத்மதர்ஷனி (அல்வாய்) சி.சிவமலர் இளவாலை) சுரேந்திரன் கொக்குவில்) ஸ்ரீகாந்தன (சுண்டுக்குளி), இ. ராதிகா (மானிப்பாய்), செல்வி மி சிவலிங்கம் (யாழ்ப்பாணம்) ஆ. சுகித்தா (சாவகச்சேரி), சடந்தநாதன் (யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (பருத்தித்துறை).

(உ-9)

# தொடர் மழையால் மக்கள் இடம்பெயர்வு

(சண்டிலிப்பாய்)

இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை மீண்டும் ஓர் இடம் பெயர்வுக்கு தற்போதைய தொடர்மழை தள்ளியிருப்பதாக அறியப்படுகிறது.

மாதகல் மேற்கு கிராமஅலுவலர் பிரிவுக்குட் பட்ட கத்திவெட்டான், மற்றும் பற்றிமா வீதி நலன் புரி நிலையங்களிலேயே இவ்வாறான அவல நிலை ஏற்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டுமுதல்பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் இம் முகாமில் தங்கியுள்ளகுடும்பங்கள் அடிப்படை வசதியிகள்குறைந்த நிலையில் தமது காலத்தைக்கடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-258)

# படையினர் வளர்க்கும் நாய்களால் தொல்லை

(யாழ்ப்பாணம்)

படையினரால் வளர்க்கப்படும் நாய்களால் படைநிலைகள் மற்றும் இராணுவ முகாம்களுக்கு ஊடாகச் செல்லும் பொதுமக்கள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் உலவும் நாய்கள் பொதுமக்களைத் துரத்திக் கடிப்பதுடன்,

அயலில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து ஆடு, மாடுகளைக் கடித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, இவற்றைப் பிடித்து ஒழிக்க முயலும் போது அவை முகாமுக்குள் ஓடி ஒளிந்து கொள்வதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

(உ-7)

# நெதர்லாந்து 25 கோடி உதவி

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப்பணிகளுக்கெனநெதர்லாந்து அரசாங்கம் 25 கோடி 70 இலட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கே இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

தவிர மீள்குடியேற்றப்படும் இடம் பெயர்ந்தமக்கள் பயன் பெறும் வகையிலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கும், அப்பாடசாலைகளுக்கு தேவையான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கும் இந்நிதிபயன்படுத்தப்படவுள்ளது.

(உ-8)


## நகராட்சி மன்றம் - பருத்தித்துறை

# மீள் கேள்வி அறிவித்தல் - 2003

2003-01-01 ந் திகதி தொடக்கம் 2003-12-31-ந் திகதி வரையான காலப்பகுதிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் விபரப் படியான குத்தகைகளை ஏற்று நடாத்துவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் படிவங்கள் யாவும் கீழே குறிப்பிடப்படும் விபரப்படி மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணங்களையும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்களையும் செலுத்தி 2002.12.09 ந் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம் கேள்விப் படிவங்களை இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் வகையுடன் மீள் கேள்வி எனவும் குறிப்பிட்டு ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு அனுப்புவதுடன், மறு பிரதியை தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை என்னும் முகவரியிட்டு 2002-12-11ந் திகதி முற்பகல் 10-00 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலே அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும் அதற்குப் பின்னர் ஒப்படைக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகள் யாவும் 2002-12-11-ந் திகதி முற்பகல் 10-30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அன்றைய தினம் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை அலுவல நாட்களில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

## அட்டவணை

| கேள்வி விபரம் | நிர்ணயித்த தொகை | மீளளிக்கக் கூடிய பிணைப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | பெறுமதி சேர் வரி. |
|---|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை (கடைகள நீங்கலாக) | 3,30,300-00 | 3500-00 | 400-00 | 80-00 |
| 2. மீன் சந்தை | 2,75,250-00 | 3000-00 | 400-00 | 80-00 |
| 3. மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 1,21,100-00 | 1500-00 | 300-00 | 60-00 |
| 4. ஆட்டிறைச்சிக் கடை | 40,150-00 | 1500-00 | 300-00 | 60-00 |

ஏற்கப்படும் கேள்வித் தொகைகளுக்கான 20% பெறுமதி சேர் வரி தனியாகச் செலுத்தப்படல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு;** மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையம் போதிய பாதுகாப்புடன் சபையால் அமைத்து வழங்கப்படும்.

ந. சிவபாலதருமகுலசிங்கம்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.
நகராட்சி மன்ற அலுவலகம், பருத்தித்துறை.
2002-11-22

நா. மணிவண்ணன் ஜே. பி. யு. எம்
உப-தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

(C-5290)

# மனித குலத்தைப் புனிதமாக்க புட்டபர்த்தியில் உறையும் பகவான்



மனம் எங்கெல்லாம சஞ்சரிக கிறதோ அங்கெல்லாம் மூவுலக மும இணைந்திருப்பதை உணர் வீர்கள். எங்கெல்லாம் மனம் செல் வதில்லையோ, அங்கே எதுவும் காணப்படுவதில்லை. ஆகையால் மனமே எல்லாவற்றிற்கும் ஆதாரம எல்லாவற்றிற்கும் காரணம். எல்லா வற்றிற்கும் சாட்சி! மனிதன் என்றால் மனம். மனிதனிடம் மூவுலகும் ஒன்றாக இணைந்து காணபடுகின்றது. இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் எல்லா ஜீவராசி களிலும், மனிதப் பிறவியே மகோன் னதமானது. காரணம் என்ன? ''மதாதமா சர்வ பூதாத்மா!'' எல்லாரிடமும் நிறைந்திருப்பதாகக் கடவுள் உரைத்தாலும், அதைச் சுலபமாக உணர்ந்து கொள்ளும் அறிவை இறைவன் அவைகளுக்கு அளிக்கவில்லை.


மனிதனுக்கு மட்டுமே தன்னை உணரும் சக்தியைக் கடவுள் கொடுத்திருக்கிறார்.

### மனிதப்பிறவி

''ஜந்தூனாம். ரஜன்ம துர்லபம'' பிறவிகளிலேயே மனிதப

கொண்டே போனால், மற்ற ஜவராசிகளைவிட மனிதன் பல மடங்கு உயர்ந்தவன் என்பது தெளிவாகும். இப்படி இருப்பினும், மனிதன மாயையில் சிக்கித் தவறான வழியில் செல் கிறான். மாயை என்றால் என்ன? சத்வ, ரஜோ, தமோ குணங்களே இவற்றிற்கு அடிப்படை வேதங்களின் வாக்கி யப்படி எவனொருவன் இந்த மூன்று குணங் களையும் கடந்தவனாக இருக்கிறானோ, அவனே பந்த விமோசனம் அடைகிறான். மோகம - பந்தம் என்றால் என்ன? சொந்தம், வீடு இவை களால் பந்தம் அதிகரித் துக் கொண்டே போகிறது. இந்தப் பந்தங்களை விட்டு விட்டால், பந்த விடுதலை கிடைப் பது சுலபமாகிவிடும்.

### உண்மையான மனிதன்



மனிதனும், எத்தனையோ வகை யில் உயர் நிலை அடைய முயற சிக்கிறான். உண் மையான மனி தனுடைய வாழ்க் கையில் கஷ்டங் களுக்கும் துன்பங் களுக்கும் குறை வில்லை. மனிதன் எல்லாவற்றையும் தைரியமாக எதிர் கொள்ள வேண் டும். இதில் தறி கெட்டு பல துன பங்களில் ஆழ்ந்து விடுபட முடியாமல் தவிப்பவர்களும் உண்டு. ஆனால் இதில் எல்லாம் முட்டி மோதி, வெற்றியுடன் வெளிப்படுபவனே உண்மையான மனிதன். எல்லா வற்றையும் விட மனிதனுடைய

நியமத்துள் இல்லையென்றால், நம்வாழ்க்கை தவறான பாதை யில் செல்லத் தொடங்கும்

### மூவுலகம்

இப்படிப்பட்ட கட்டுப்பாடுள்ள மனதில மூன்று உலகமும் இணைந்து காணப்படும். என்ன அந்த மூவுலகம்? பகவத்கீதை மட்டுமன்றி, காயத்ரி மந்திரத்தி லும் சொல்லப்படும் அந்த உல கங்கள் பூர், புவஸ், ஸுவ, பூலோ கம், புவர்லோகம் மற்றும் ஸ்வர்க்கலோகம்

இந்த மூவுலகமும் வேறெங்கோ இல்லை மனிதனுள்ளேயே உறைகின்றன. ஆதிபௌதிகம், ஆதி தெய்வீகம், ஆத்யாமிகம் இவையே மூவுலகமும் இந்த மூன்று உலகத்தையும், மூன்று தெய்வங்களாகப் பண்டைய நாட் களிலிருந்து பூஜித்து வந்தார்கள்.

மனிதனிடம் பலவகையான சக்தி இருக்கிறது, மறைந்தும் காணப்படுகிறது. அவற்றை மனிதன் உணர்ந்து கொள்வ தில்லை. சக்தி இல்லை என் றால் அவனால் சந்திரனுக்குப் போக முடியுமா? உலகை வலம் வரமுடியுமா? இது யந்திரத்தின் சக்தியோ, மந் திர சக்தியோ அல்ல. மனிதனு டைய உள் உறை யும் சக்தியே இவற்றிற்குக் காரணம். இது வே 'காஸ் மிக் பவர்' என்றார் கள். அப்படியென றால் என்ன? சூரி யனின் ஜாஜ் வல யமே ஒளியே 'Cosmic power' இதையே வேத ங்கள் சந்தரமா மனஸோ ஜாதா ஸ்ட்சோ சூர்யோ வ்ஜாயதா' எனச் சுலபமாகச் சொல்லி விடுகின்றன. சந்திரனும் சூரியனும் நம்முள்ளேயே இருக் கின்றன. நம் மனமே சந்திரன் நம் கண்ணின் ஒளியே சூரியனின்



இது உலகியல் சம்பந்தப்பட்டது. ஆகையால் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பூ என்கின்ற சக்தி பரவியுள்ளது.

### பிராணசக்தி

இதைத்தவிர மனிதனிடம் மற் றொரு சக்தி இருக்கிறது. அது 'Vibration power' என்கிற பிராண சக்தி! இந்த சக்தி தான் மனிதனின் ஒவ்வொரு அங்கத்தையும் இயக் குகிறது. இதுதான் புவர்சக்தி எனப்படும். இதன் மூலமாகத் தான் இயக்கங்கள் நடைபெறு கின்றன. புலன்கள் அவற்றின் செயலைச் செய்கின்றன. நல்ல பார்வை, நல்ல விஷயங்களைக் கேட்பது, நலல பேச்சைப் பேசுவது, நல்ல செயல்களைச் செய்வது எல்லாம் இப்பிராண சக்தி தான்! இதன் மூலம் நல்ல வளங்களும் செல்வங்களும் பெருகுகின்றன.

## அவரின் போதனையைப் பின்பற்றுவோர் வாழ்வில் ஆத்மபலம் பெறுவர்

பிறவி எடுப்பதுதான் மிக அரியது. இதைத்தான் வேதமும் எடுத் துரைக்கிறது. ஒவ்வொரு மனிதப் பிறவியாலும், அன்னமய, பிராண மய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய என ஐந்து கோசங் கள் உள்ளன. மனிதனுக்கு மட்டுமே, இது நல்லது, இது தீயது எனப்பிரித்துப் பார்க்கும் சக்தி உண்டு.

மனிதனிடம் பௌதிகமான உலகியல் அறிவோடு, ஆன்மீக அறிவும் மிளிரக் காண்கிறோம். ஒவ்வொரு உயிரினமும், பந் தங்களாலேயே இந்த உலக வாழ்க்கையில் பிறவி எடுக்கிறது மனிதனும் அப்படியேதான் ! ஆனால் மனிதனால் மட்டுமே பந்தங்களைத் தளை அறுத்து வெளியேறுவதன் மூலம் மோக க்ஷயம் என்ற நிலையை அடைந்து, மோட்சம் என்கிற விடுதலையைப் பெறமுடியும்.

இப்படியே பார்த்துக் துன்பங்களுக்கு என்ன கார ணம்? மனிதனுக்கு ஆசைகள அவசியம் தான். ஆனால் அந்த ஆசைகள் மனிதன் தன் இலக் கை எட்ட்ப்பயன்படுவதாக அமை யும்.

### ஆசைகள்

நன்றாகப் படிக்க வேண்டும் நல்ல வேலையில் அமர வேண் டும் என்பதெல்லாம் அத்தியாவ சியமான தேவைகள்தான். தன் குடும்பக் கௌரவம், புகழ், கீர்த்தி இவற்றின் மாயையில் சிக்கி மனிதன் பிரமித்துப் போகிறான். ஆசைகளில் தவறு இல்லை. மனிதன் தனக்கு என்ன வேண்டுமோ அதையே விரும்பு கிறான். ஆனால் கலி புருஷனின் தூண்டுதலால் ஆசைகள் மிதமிஞ்சிப் போகின்றன.

இதனால் தான் மனிதன் வழி தவறிப்போய் அல்லற்படுகிறான். ஒவ்வொரு பதவியைப் பற்றிய ஆசையும் கூட அளவு மீறி இருக் கக் கூடாது. எல்லாமே ஒரு பிரகாசம். அந்தப் பிரகாசத்தி னால்தான் மனிதன் இந்தப் பிரபஞ் சத்தைப் பார்க்க முடிகிறது. இதைக் காட்டிலும் அதிக வலிமை வாய்ந்த சக்தி எதுவும் கிடையாது.

வீட்டில் மின் சக்தி இருக் கிறது. ஒருவர் உணவு சமைக்க அதை உபயோகப்படுத்துகிறார். சிலர் துணிகளை 'இஸ்திரி' போடப் பயன்படுத்துகிறார்கள். மற்றும் சிலர் 'பா(f)ன்' மூலம் காற்றுவாங்கவும், வெளிச்சத்திற் காகவும் உபயோகப்படுத்து கிறார்கள். எப்படி இந்த மின் சக்தி பலவகையில் பயன்படு கிறதோ, அதே போல மனித னுள் மறைந்து காணப்படும் Cosmic Power தெய்வீகமான ஆத்ம சக்தி பல வகையில் செல விடப்படுகிறது. இந்த சக்தி மறைந்து காணப்படுகிறது. வெளிப் புறப் பார்வைக்குத் தெரிவதில்லை. இப்படி மறைந்து காணப்படும், அனந்தமான சக்தியே ஆதிசக்தி. இதைத்தான் ''பூ'' என்றார்கள்.

**நன்றி: சனாதன சாரதி**

**ஆண்டுகள் பல்லாண்டு வாழி**

நாளும் பொழுதும் நமக்கு
நற் சிந்தனைகள் கூறி
பாழும் நோய் அகற்றி
படித்திடப் பள்ளி தந்து
ஏழு பத்து ஏழு ஆண்டு
எமக்கருள் புரிந்து எம்மை
ஆளும் அவதார புருஷா
ஆண்டு பல்லாண்டு வாழி
ஆன்மீகம் பேசிப் பேசி
அடுத்த வரை நசித்து
மாய் மாலம் கொட்டி மண்ணை
மாசாக்கும் மாந்தர்களே
ஆன்மீகம் பேச்சில் அல்ல
அன்பான சேவை தன்னில்
தானென்று சொன்ன. சாயி
தேன் போல நீடு வாழி

கவிமணி அன்னைதாஸன்

## மூதாட்டி வெட்டிக் கொலை

(உடுவில்)

திருடச் சென்ற நபர் அங் கிருந்த மூதாட்டியைக் கத்தி யால் வெட்டிக் கொன்றதோடு அவரது மகனையும் வெட்டிக் காயப்படுத்திய சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முறி கண்டி செல்வபுரம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சு.இராசமணி (வயது83) என்பவரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவராவார். (உ-261)

## மலேரியா வில்லைகளை உட்கொண்ட யுவதி மரணம்

(அச்சுவேலி)

பனடோலுக்குப் பதிலாக, மலேரியாவில்லைகளை தவறு தலாக உட்கொண்ட யுவதி ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில் வழி யில் பரிதாபகரமாக மரணமா னார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் துன் னாலை வடக்கைச் சேர்ந்த சி.சிவகுமாரி (வயது22) என்ப வரே மரணமானவராவர்(உ-14)

## பட்டச் சான்றிதழ்களைப் பெறுக

யாழ். திறந்த பல்கலைக் கழக முகாமைத்துவ டிப்ளோமா பட்டப்பின் கல்வி டிப்ளோமா, சிறு வணிக முகாமைத்துவ பட்டச் சான்றிதழ்களை யாழ்-பிராந்திய நிலை யத்தில் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந் தப்பட்டவர்களை வந்து பெற்றுச் செல்லுமாறு பிராந்திய நிலைய இணைப்பாளர் க.ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ-9)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு கடலில் கொந்தளிப்புடன் சீரற்ற கால நிலை நிலவுவதால், மீனவர்க ளை கடலிற்குச்செல்ல வேண் டாம் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத் துள்ளது (உ-10)

## புதிய - ஜனநாயகக் கட்சியில் புதிய தலைமைத்துவம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 8ம்,9ம் திகதிகளில் யாழ்ப பாணத்தில் நடைபெற்ற புதிய - ஜன் நாயகக் கட்சியின் நான்காவது தேசிய மாநாட்டில் புதிய தலை மைத்துவமும் தெரிவு செய்யப் பட்டது.

பதினாறு பேர் அங்கம் பெறும் மத்திய குழுவை மாநாடு ஏகமன தாகத் தேர்ந்தெடுத்தது. அவ் மத் திய குழு தனது முதலாவது கூட்டத்தை நடாத்தி பொதுச் செய லாளராக சி.கா.செந்திவேல், தேசிய அமைப்பாளராக இ.தம்பையா, பொருளாளராக க.ஞானக்ரன் ஆகி யோரைத் தெரிவு செய்துள்ளது.

ஏழு பேர் கொண்ட அரசியல் குழுவும் 4பேரையுடைய செயலகமும தேர்ந்தெடுக்கப்பட்டது. கட்சியின் தலைமைச் செயலகம் தொடர்ந் தும் கொழும்பில் இருந்து செயல்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ)

## இளைஞர் அமைப்புக்கள் மீளமைப்பு

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக உள்ள இளைஞர் அமைப்புக்கள் இளைஞர் சம்மேளனங்கள் என்பன மீள் அமைப்புச் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலர் பிரி வுகளுக்கும் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மீளமைக்கப்பட்ட இளைஞர் அமைப்புகள் புத்தாண்டு முதல் செயற்பட உள்ளன. (உ-252)


## மாவீரர் எழுச்சி விழா - 2002

**நவம்பர் - 25**

**மன்னார் மாவட்டம் முழங்காவில் பிரதேசம்**



**25.11.2002 மாலை 4.00மணிக்கு**

மேற்படி எழுச்சி விழாவில் விசேட நிகழ்ச்சியாக கடற் புலிகளினதும், கடற்கரும்புலிகளினதும் விசேட படை யணிகளின் அணிநடை இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து முழங்காவில் மாவீரர் கலை யரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

"அழைத்த அரங்கு உங்கள் வரவால் மகிழ்வுறும்"

**இவ்வண்ணம்**

பூநகரி பிரதேச கடற்தொழிலாளர்கள் சங்கங்கள சமாசம்,
மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்கள் சமாசம்,
வர்த்தக் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள்.

# இன்று ஒரு தகவல்

## எப்படி வாழ வேண்டும்?

மனிதன் ஒருசமூகபிராணி இப் பிராணி தனித்துவமுடையது, மகத்துவமுடையது பெறுமதி மிக்கது. எனவே இவற்றைத் தற்காப்புச் செய்ய வேண்டிய பணி ஒவ்வொரு தனி மனிதனுக்குமுண்டு. மனிதன் பிறக்கும் போது சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் அவன் எங்கு பார்த்தாலும் ஏதோவொரு சட்டத்துக்குள்ளும், வரையரைக்குள்ளும் கட்டுப்பட்டுக் கிடக்கிறான். பின் அவ்வரையரைக்குள் வாழ்வதற்குத் தன்னை வடிவமைத்துக் கொள்கிறான். இவ் விடயத்திலேயே அவனது தனித்துவமும், மகத்துவமும் உச்சம் பெறத் தொடங்குகின்றது. கறியின் சுவைக்கு எந்தளவுக்கு உப்பும் புளியும் முக்கியமானதோ, அந்தளவுக்கு சமூகப் பிரக்ஞையின் சுவைக்கு இவை களமாக அமைகின்றன.

இப்படியும் வாழலாம், அப்படியும் வாழலாம், எப்படியும் வாழலாம் என வாழ்வதைச் சமூகம் மேலெழுந்த வாரியாக அங்கிகரிக்குமேயன்றி உள்ளார்ந்த ரீதியாக அதை அங்கீகரிக்காது. அங்கிகரிக்கவும் முடியாது. வசதிக்கும் வாய்ப்புக்கும் தேவைக்கு மேற்ற வகையில், தமது எண்ணங்களை விரிவுபடுத்திச் சந்தர்ப்ப வாதத்துக்கு முக்கியத்துவமளித்தால் அது சீரிய வாழ்க்கையாக ஒரு போதும் அமையாது. எனவே வாழ்க்கையானது ஒரு நோக்கையுடையதாக இருத்தல் வேண்டுமேயன்றி, இங்கே சந்தர்ப்பவாதமும் சுய நலமும் தாண்டவமாடக்கூடாது. அப்போதே தனி மனிதநேயம் வலுவுடையதாக அமையும் இதை உறுதிப் படுத்துவதற்கு ஆதாரமாக புராண இதிகாச கதைகள் அமைந்துள்ளன. இக் கதைகளுள் யுக புருஷர்களாகச் சில கதாபாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன இக் கதைகளுள் சிலாகிக்கத்தக்க வகையில் அநீதி நீதியை விரட்டும், அதர்மம் தர்மத்தைத் துரத்தும், ஆயின் அநீதியும், அதர்மமும் வெற்றி முரசு கொட்டும் அவ்வெற்றி வேட்கை உலகை உலுக்கும் அதை எண்ணி மானிடம் திகைக்கும். இறுதியில் தர்மமும் நீதியும் வெல்லும். இவ்வேளை உலகம் உவகை கொள்ளும் அப்போது மானிடம் மகிழு[ம்] என்ப[து] யாமறிந்ததே. அரிசசந்திர மன்னனுக்கு ஏற்பட்ட சோதனை, வேதனை மத்தியில் ஒரு பொய்யுரைத்திருந்தால் அவ் வரலாறு காப்பிய மாகியிராது. பாரதத்தில் கன்னன் செஞ்சோற்றுக் கடனை மறந்திருப்பானே யாகில் அவ் வரலாறு இன்று தடம் புரண்டிருக்கும். இராமாயணத்தில் இராமன் காடேக மறுத்திருப்பானேயானால் இராமாயணம் சிக்குண்டிருக்கும் இதிலிருந்து நாமறிவது யாதெனில் நீதியும் தர்மமும் தழைத்தோங்க குறிக் கோளுடன் வாழ்வது எமது வாழ்வைச் சீரமைக்கும் வாழ்வைப் புனரமைக்கும் என்பதே யாகும் எனினும் யதார்த்தத்தையும் வரலாறு சித்தரிக்கும் வகையில் பண்பாடுகளுடன் பழக்கங்களும் மிளிர இப்படித்தான் வாழ வேண்டுமென்கின்ற கோட்பாட்டிற் கமைய வாழப் பழகுவோம்.

மு. விக்னேஸ்வரன்

# வெகுஜனப் போராட்டங்கள் மக்களின் ஜனநாயக வெளிப்பாடு

### திருமலை உப குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(திருகோணமலை)

தமிழீழ மக்களால் அடிக்கடி நடத்தப்படும் புறக்கணிப்பு, கடையடைப்பு, வீதி மறியல், ஊர்வலம் ஆகியவற்றால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகின்றதென கடந்த வியாழன் திருகோணமலை மாவட்ட பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில், இத்தகைய போராட்டங்கள் ஜனநாயகத்தின் வெளிப்பாடாகையால் எவராலும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்றும், மக்கள் தமது உணர்வலைகளை வெளிப்படுத்தவே இதனைச் செய்கிறார்கள் என்றும் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

விடுதலைப்புலிகள் கைப்பற்றிய அரச தரப்பு வாகனங்களையும், கைதிகளையும் ஒப்படைக்குமாறு அரச தரப்பினர் இச் சந்திப்பில் கோரிக்கை விடுத்தபோது, புலிகளிடம் இருந்து படையினர் கைப்பற்றிய வாகனங்களையும் ஆயுதங்களையும் ஒப்படைத்தால் இது தொடர்பாக பரிசீலிக்கலாம் என்று படைத்தரப்பினரிடம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது. (ம)

## இலவச தென்னை நாற்றுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட தகவல் தொடர்புமையம் நடத்தும், இலவச தென்னை நாற்றுக்கள் வழங்கல் நிகழ்வு எதிர் வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11 00 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவ திருமதி தே. தனராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

## அச்சுக்கலைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மிகக் குறைந்த முதலீட்டில் சுயமாகத் தொழில் செய்யும் திரை அச்சுக்கலை 3 நாள் பயிற்சியை தென்னிந்தியாவைச் சேர்ந்த அச்சுக்கலை நிபுணர் ஆர். பரதன் யாழ்ப்பாணம், பிரதான வீதி, 79 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கரீர் கொம் இன்ஸ்ரியூட்டில் நடத்தி வருகிறார்.

இக் கலையைப் பயில விரும்புவோர் உடனடியாக மேற்படி முகவரியில் ஆசிரியருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 'கல்லறைதழுவும்கானங்கள்' நேற்றுமுன்தினம்அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திஇசைக்குழுவினரின் 'கல்லறைதழுவும் கானங்கள்' ஒலிப்பேழை அறிமுக விழா நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாணவர் அமைப்பைச் சேர்ந்த விதுரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகைச்சுடரினைமாவீர் அன்புவின் தாயாரும், பொது சுடரினை நிதர்சன நிறுவனத்தைச் சேர்ந்த பூமாவும் ஏற்றி வைத்தார்கள்.

அதனை அடுத்து என். வீ. நவரத்தினம் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

பின்னர், ஒலிப்பேழையின் முதல்பிரதியை கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் நிஷாந்தன் வெளியிட இசை அமைப்பாளர் கண்ணன் பெற்றுக் கொண்டார். (உ-10)

## வெள்ள வாய்க்காலை துப்புரவாக்க நடவடிக்கை

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ளத்தை வழிந்தோடச் செய்ய மானிப்பாய் பிரதேச சபை வழிவகை செய்யவுள்ளது.

இந்த வகையில், மேற்படி பகுதி வெள்ள வாய்க்காலில் வெள்ளம்வழிந்தோடத்தடையாகவுள்ள புல் பூண்டுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேற்படி பகுதியில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்த காரணத்தால் பெருமளவு குடும்பங்கள் இடம்பெயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-201)

## பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை உபகுழுக் கூட்டத்தில் பங்கேற்பதை புலிகளின் தளபதிகள் தவிர்ப்பு

(கொழும்பு)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெறும் பாதுகாப்பு தொடர்பான உப குழுக் கூட்டங்களிற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள் தமது பாதுகாப்பு கருதி கலந்து கொள்ளமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறவுள்ள உப குழுக் கூட்டங்களுக்கு புலிகளின் தரப்பு தளபதிகள் 'கலந்து கொள்ளும் போது மெய்ப்பாதுகாவலருடன் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரப்பட்டது.

ஆனால், இது குறித்த அனுமதியினை பாதுகாப்பு அமைச்சு இன்னமும் வழங்கவில்லை.

இதனாலேயே இராணுவப் பிரதேசங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

நேற்று அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட உப குழுக் கூட்டத்திலும் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா உள்ளிட்ட தளபதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற மாவட்டங்களுக்கான பாதுகாப்பு உப குழுக் கூட்டம் சூனியப் பிரதேசங்களில் நடைபெற்றதனால் அதில் கேணல் தீபன், கேணல் கருணா போன்ற தளபதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-5, 8)

## கியூமெடிகா நிறுவன மருத்துவ சேவை நிறுத்தம்

(தென்மராட்சி)

கடந்த ஒருவருட காலமாக சாவகச்சேரியில் பிரதி வியாழன்தோறும் இலவசமருத்துவ சேவையை வழங்கி வந்த கியூமெடிகா நிறுவனம் அதன சேவையை நிறுத்துவதற்கு முடிவு செய்தமை குறித்துஇப்பகுதி பொதுமக்கள் மிகுந்த கவலையும் அதிருப்தியுந்தெரிவித்துள்ளனர்.

சாவகச் சேரியில் இடம் பெயர்ந்த குடும்பங்கள்மீளக் குடியமர்ந்த சமயம் அவர்களுக்கு அங்கு எவ்விதமான மருத்துவ சேவையும் கிடைக்காத தருணத்தில் கியூமெடிகா நிறுவனம் வைத்தியர்களை அமர்த்திபொதுமக்களைமருத்துவ பரிசோதனை செய்துஇலவச மருந்துகளை வழங்கி வந்தது.

இச்சேவை மூலம் பிரதி வியாழன் தோறும் நூற்றுக்கணக்கான பொது மக்கள் மருத்துவ சேவையைப்பெற்று வந்தனர்.

ஆயினும், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான மருத்துவ சேவை தற்போது வழங்கப்பட்டு வருவதாக தென்மராட்சி பிரதேச செயலகவட்டாரங்கள் மேற்படிநிறுவனத்துக்குத்தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து தாம் தமதுமருத்துவ சேவையைநிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகசம்பந்தப்பட்ட சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்நிறுவனத்தின் மருத்துவ சேவையை பொதுமக்களின் நன்மையும் வசதியும் கருதி சாவகச்சேரியில் மீளவும் ஆரம்பிக்குமாறு கோரி இப்பகுதிப் பொது மக்கள் கோரிக்கை விட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில்முழுமையானமருத்துவ சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் தரப்பில்சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. (உ-77)

## வாகன ஓட்டுநர் செயல் முறைப் பரீட்சை இனி அடுத்த மாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சை நேற்று ஆரம்பமாகி எதிர் வரும் 29 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது

இதேவேளை, வாகன ஓட்டுநர் செயல் முறைப்பரீட்சை இம் மாதம் இடம் பெறாது. மேற்படி பரீட்சைக்கு ஏற்கனவே திகதி நிர்ணயிக்கப் பட்டவர்கள எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு மறு திகதியை உறுதிப்படுத்துமாறும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-3)

## பல்கலை மாணவன்கொலை 6மாணவர்கள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 6 மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஹங்கொடவில மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பின்போதே இவ் 6 மாணவர்களும் இனங்காணப்பட்டனர்.

இச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 36 மாணவர்களும் இவ் அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இக் கொலை வழக்கு சம்பந்தமாக மேலும் இரு அடையாள அணிவகுப்புகள் இடம் பெறவுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். (உ-8)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், Martin Scorsese இயக்கிய The Last Temptation oF Christ எனும் திரைப்படம் இன்று மு.ப. 10.00 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

சோதிட பலன்

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து

# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### உடல் எண்-4 கூட்டு எண்ணாகிய உயிர் எண்-4

4,13,22,31 போன்ற தேதியில் பிறந்து, இவர்களது தேதி மாதம், வருடம இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4வருமேயானால் பூரண இராகு ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர், இவர்களுக்குப் பணச்சம்பாதிப்பதை விட அனுபவ சம்பாத்தியமே அதிகம, பார்ப்பதற்கு உயரமாகவும், இரட்டைநாடியும் கொண்ட இவர்களுக்கு நரம்புசக்தி அதிகம், பெயர் நன்றாக அமைந்து விட்டால் எல்லா வலங்களும் பெற்று வாழ்வர்; ஆனால் பெயா பொருத்தமானதாக அமையா விட்டால் பல்வேறு சோதனைகளால் வடிகட்டப் படுவர்;

உலக விஷயங்கள் அனைத்தும் இளமையிலேயே அறிந்திருப்பதால், தன்னுடைய கருத்துக்களை எழுதுவதன் மூலமும் பேசுவதன் மூலமும் துடுக்காக வெளியிடுவா. ஆனால் இவர்களுடைய சிந்தனைமிகத்தெளிவாகவும் பலருக்குப்பயன்படும் படியும் இருக்கும,

தனக்காக உழைப்பதை விடப்பிறருக்காகவே,உழைத்து மற்றவர்களைஉயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவர். தனக்கென்று எந்தக் காரியத்திலும் சிரத்தை எடுத்துக் கொள்ளாததால்,இவர் ஒரு முழுநேர பொதுஜன உபகாரி எனறால் மிகையாகாது.சிலா உத்தியோகத்தில் இருந்தாலும் பலருக்கு உதவ முனைவருவர்,கடினமான உழைப்பாளிகளான இவர்கள் கையில் பணம் உள்ளவரை திட்டம் இல்லாது இருப்பர், ஆனால் பணம் இல்லை யென்றால்புதியதிட்டம் உருவாகும்.

இவர்களுக்கு நல்ல நண்பர்கள இருப்பதால் எந்தச் சூழ்நிலையிலும் நண்பர்கள இவர்களைக் கைவிடமாட்டார்கள. தான் கண்ட காட்சிகளைமற்றவரிடம் வர்ணித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள. எப்பொழுதும் ஊர் சுற்றிய வண்ணமே இருப்பர்.

இயற்கைக் காட்சிகளையும், மலைப்பிரதேசங் க ளை யு ம் கண்டுகளிக்க ஆசைப்படுவர்.

தான் எழுதுவதாலும், பேசுவதாலும், பலருக்கு உதவுவதாலும், கலையாலும பெரும்புகழை அடைவர், ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், கஷ்டமான சூழ்நிலையில் வாழ்வர். தனது பிறந்ததேதிக்குப் பொருத்தமாகப் பெயர் அமைந்தவர்கள்,வீடு, நிலம், வாகனம் போன்ற வசதிகளுடன் சீரும்,சிறப்புமாக இருக்கின்றனர், மிகுந்த தைரிய சாலியான இவர்கள்,உணர்ச்சி வசப்படுபவர்கவே.பிறர் கூறுகின்ற கஷ்டங்களுக்கு உடனே தன்னால் முடிந்த நன்மையைச் செய்து, தீர்வுகாண வேண்டுமென்று முன்வருவர், இவர்களிடம் பலர் ஆலோசனை கேட்டு முன்னேற்றம் அடைவர், இவர்கள் பேச ஆரம்பித்து விட்டால் முடிவே கிடையாது, கேட்பவர்கள் பிரமிக்கும்படி நல்ல கருத்துக்களைத் தன்னையறியாமலே கூறுவர்,பணம் தேடுவது சிரமமாக இருந்தாலும் நண்பர்களை அதிகம சம்பாதித்து விடுவர்,வயது ஆக,ஆக நல்ல எழுத்தாளராகவும், கவிஞராகவும், பேச்சாளராகவும், இயக்குநராகவும், நாட்டின் முக்கிய பொறுப்பாளராகவும் வாழ்கின்றனர்;

ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையா விட்டால் எல்லாத்திற மை யி ரு ந் து ம் நன்மை பெறாது வாழ்க்கையை வீணாக்குவர், பெயர் பொருத்தமாக அமைந்துவிட்டால் வாழ்க்கையின் உச்ச நிலையை அடைந்து உலகையே தன்வசமாக்கி விடுவர்,சாஸ்திரம், ஜோதிடம், வேதாந்தம், வைத்தியம் போன்றவற்றில் நாட்டம் கொண்ட இவர்கள் மனம் முடிவில் கடவுளைத் தியானிப்பதில் நிலை பெறும்.

### தொழில்

இவர்களுக்குப் பேச்சாலும், எழுத்தாலும் பேரம் பேசுவதாலும் பணம் ஈட்டும் பாக்கியம் உண்டு. அதோடு,கல், இரும்பு, வாகனம்,மருந்து போன்ற தொழிலாலும் இலாபம் பெறுவர்;

### நோய்

மூட்டு சம்பந்தமானவியாதிகளும்,வயிற்றுக் கோளாறும் உஷ்ண சம்பந்தமான வியாதிகளும் வந்து நீங்கும் மூத்திரக் கோளாறும் சிலருக்கு வருவதுண்டு.

### பெயர் அமைக்கும் முறை

பூரண இராகு ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரிய சுக்கிர ஆதிக்கமான 10,19 37,46,73,15,24,33,42,51 60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொள்ளலாம்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-1,6 யோகமான தேதிகள்-1,10, 19,28,6,15,24 ;யோகமான மோதிரக்கல்- கோமேதகம், வெளிர் நீலக்கல் (ஆறு நால் உள்ளகல் மிகச்சிறப்பு)யோகமான நிறம்-மஞ்சள்,வெளிர் நீலம்,சந்தனக் கலர்,ஆகாத நிறம்-கறுப்பு,சிவப்பு, கோப்பிகலர்,ஆகாத தேதிகள்-8 17,26.குறிப்பு;ஆனால் 8, 17,26 எதிர்பாராத நன்மை அளிக்கும்.

### உடல் எண்-4கூட்டு எண்ணாகிய உயிர்எண் 5

4,13,22,31 போன்ற தேதியில் பிறந்து இவர்களது தேதி,மாதம்,வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் இவர்கள் இராகு,புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பார்ப்பதற்குக் கம்பீரமாகத் தோற்றம் அளிக்கும்,இவர்கள் வசதி இருந்தால் நன்றாகப் பருமனாகி விடுவர்.எந்த வேலையும் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணுவர் தாமதமாக வேலை செய்பவரைக் கண்டால் இவர்களுக்குப் பிடிக்காது யார் எதைப் பேசினாலும உடனே 'டேப்'செய்த மாதிரி மனதில் பதிய வைத்து கொள்வர். இவர்கள் கூறுகின்ற கருத்துக்களை,பிறர் புரியவில்லைஎன்றால்கோபம் தான் வரும்.

இவர்கள் போடுகின்ற திட்டம நிறைவேற மின்னல் வேகத்தில் மூளையைப் பயன்படுத்தி செயல்படுவர். இவர்களை எப்பொழுதும் பத்துப்பேர் சூழ்ந்திருப்பார்கள். தயாளகுணம் கொண்ட இவர்கள் பிறருக்கு நன்கு செலவு செய்து, அதற்குத் தக்க வேலையையும் வாங்கிவிடுவர். பெரும்பணம் சம்பாதிக்கும் திட்டங்களையே போட்டு அதைஇயக்கப் பாடுபடுவர். யாரிடமும் உடனே பழகிவிடும் இவர்கள் புதிதாகப் பார்ப்பவர்களுக்குத் தலைக்கனம் பிடித்த மனிதர் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் நல்ல மனம் கொண்டவர்கள். சில நேரங்களில் பெரிய திட்டங்களில் அவசரப்பட்டு இறங்கி மாட்டிக்கொண்டு சிரமப் பட்டு வெற்றியடைவர். தொழில் செய்யும் ஆர்வம் மிகுதியாக இருப்பதால் நேர்மையற்ற காரியங்களிலும் சிலர் இறங்கி வருந்துவதும் உண்டு.

சிறப்பான பேச்சுத்திறன் படைத்த இவர்கள் பேச்சாலே சில காரியங்களைச் சாதிப்பர். அடிக்கடி பயணங்களை மேற்கொள்ளுவதால் உடல் உஷ்ணத்தால் சிறிது வருந்துவர். கவர்ச்சியான நடை, உடையாலும், பிறரை மகிழ வைக்கும் காரியங்களினாலும், பலரைத் தன் வசமாக்கிக் கொள்வர்; தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களைத் தைரியமாகக் கூறிச் சிலரது பகையைத் தேடிக் கொள்வர். தனிமையில் இவர்களால் இருக்க முடியாது. இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பெயர் பொருத்தமானதாகஅமைந்து விட்டால் இவர்கள் வாகனம், நிலம், வீடு தொழில் போன்ற எல்லா வசதிகளையும் பெற்று வாழ்வர்.

ஆனால் பெயர் நன்றாக அமையவில்லை யென்றால் மன வேதனையால் வாடுவர். தைரியமாக எதையும் எதிர்க்கும் மனம் கொண்ட இவர்கள், தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலும் கை தேர்ந்தவர்கள். தன்னைச் சேர்ந்த நண்பர்களுக்கு ஆபத்து வந்தால் எதையும் யோசனை செய்யாது உதவ முன்வருவர். பேச்சாலும் எழுத்தாலும் சிலருக்குப் புத்தி புகட்ட வேண்டும். என்று எண்ணுவர். வழக்குகளையும், வமபுகளையும் சந்திக்க நான்தயார் என்று கூறுவர் உத்தியோகத்தில் இருக்கும் சிலர் தனது திறமையால் உயர்ந்த நிலையை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையா விட்டால், திறமைஇருந்தும் முன்னேற முடியாது. தன் மனம் கடவுளைத்தியானிப்பதில்அமைதிபெறும்என்று நம்பிக்கை கொண்டவர். சாஸ்திரம்,மருத்துவம், சமயம், சோதிடம் போன்றவற்றில் நாட்டமுடைய வராகஇருப்பர். சிறிதுதெரிந்த விஷயங்களைக் கூட அதிகம் தெரிந்தது போல் பேசிக்கெட்டிக்காரர் என்றுபெயர் எடுப்பர்; போக விஷயங்களில் அதிக நாட்டமுடையவராக இருப்பர்.

எல்லாப் பழக்கங்களையும் அனுபவித்து அதைத் தொடராது விட்டுவிடுவர். இவரை உடன் இருப்பவர்களே புரிந்து கொள்ளமுடியாது தவிப்பர்; பணம் உள்ளபோது குதூகலமாகஇருப்பர்.ஆனால் கையில் பணம் இல்லாதபோது கடிந்து விழுவர். ஒருகாரியம் வேகமாக முடியவில்லை என்றால் கடுமையானகோபம் வரும். இவர்களது பெயர், பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைந்துவிடுமேயானால் வெகுசீக்கிரம் உயர்ந்த நிலையை அடைவர்;

### தொழில்

கமிஷன், எஜென்சீஸ்,வாகனம், இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில் இவர்களுக்குச்சிறந்தவையே; ஓரிடத்திலிருந்து பொருளை மற்றோர் இடத்திற்கு அனுப்புவதன் மூலமும்பொருள் சேர்ப்பர். சிலருக்குக் கைத்தொழில் துறை அமையும்.

### நோய்

இவர்களுக்கு வாத, பித்த நோய்களும, உஷ்ணசம்பந்தமான நோய்களும் வந்துநீங்கும். சர்க்கரை, உப்பு போன்றவற்றைக் குறைத்துக்கொள்வது நலம்.

### பெயர் அமைக்கும் முறை

இராகு, புதன் போன்ற ஆதிக்கம் கொண்ட இவர்களுக்குசூரியன் புதன் சுக்கிரன் ஆதிக்கமான, 19, 37, 46 ,6 4, 73, 15 24,33,42, 51, 69, ;14 23, 32, 41,59 போன்றஎண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-1,6,5 யோகமானதேதிகள் 1,10, 19,28,6,15, 24,5,14,23; யோகமான மோதிரக்கல்-கோமேதகம்,வைரம், வெளிர் நீலக்கல்; யோகமான நிறம்-மஞ்சள், வெளிர்நீலம், சந்தனக்கலர்,சாம்பல் நிறம்-ஆகாதநிறம்.கறுப்பு,சிவப்பு' ஆகாத தேதிகள- 8,17,26 ஆனால் 8,17,26 எதிர்பாராத நன்மை அளிக்கும்;

(தொடரும்)

**ஆர். ஐ. துரைமுருகர்**

## இராசி பலன்

24-11-2002
(கார்த்திகை 8, ஞாயிறு)
சதுர்த்தி மு:ப 10 03 வரை
புனர்பூசம் ந. இ 12 04வரை
இராகுகாலம்- 4. 41 - 6 11
நல்லநேரம்- 9.11 – 10. 41

**மேடம்**
சகோதரர் உதவி, முயற்சி பலிதம், அன்னியர் சந்திப்பு, நல்ல சம்பவம்

**இடபம்**
மனக்கிலேசம்,மாதர்நட்பு, குடும்பத்தகராறு, முயற்சி தாமதம்

**மிதுனம்**
புதிய பொருள் சேர்க்கை, பெரியோரால் மதிக்கப்படல், கற்பனை மிகுதி, வாக்கு மேன்மை

**கடகம்**
பிதாசிந்தை, நித்திரைக் குழப்பம், இளைய சகோதரர் நன்மை, முயற்சிதாமதம்

**சிங்கம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, பிரயாண சுகம், தெய்வ சிந்தை, முயற்சிதாமதம்

**கன்னி**
அதிகாரம், நல்ல சம்பவம், உறவினர் வருகை, காரிய அனுகூலம்

**துலாம்**
புதியதிட்டமிடல், வயிற்றுக்கோளாறு, அமைதிக் குறைவு, காரிய தாமதம்

**விருச்சிகம்**
உஷ்ணரோகம், குடும்பத்தில் மனஸ்தாபம், உறவினர் உதவி, முயற்சி தாமதம்

**தனுசு**
நல்லவரவேற்பு, காரிய நன்மை, வாகனநன்மை, போசனசுகம்

**மகரம்**
புதிய தொழில்சிந்தை, ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, காரிய,அனுகூலம்.

**கும்பம்**
தாழ்ந்தசுபாவம்,சொத்துக்களால்கவலை, தெய்வ சிந்தை, முயற்சி தாமதம்

**மீனம்**
நிலைமாற்றம், தன்னம்பிக்கைக்குறைவு, ரோகபயம், முயற்சி தாமதம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மேசன் தொழிலாளி படுகாயம்

மாடிக் கட்டடம் அமைத்துக் கொண்டிருந்த வேளை கால் தடுக்கி கீழே விழுந்த மேசன் தொழிலாளி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதனன்று அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ் தவராசா(வயது 45) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (உ-111)

நெல்லியடி பொதுச் சுகாதாரபரிசோதகர்பிரிவில்

# டெங்குக் காய்ச்சலுக்குகாரணமான நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் நெல்லியடிபொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக நடத்திய ஆய்வில் டெங்குக் காய்ச்சலை ஏற்படுத்தும் நுளம்புகளின் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடிநகரப்பகுதி,மற்றும் அதனை அண்டிய பகுதி ளில் உள்ள கடைகள் உணவகங்கள் கராஜ், சைக்கிள் ரயர் ஒட்டும் கடை,குளிர்களிநிலையங்கள், தனியார் வீடுகள், சேவிஸ் ரேசன் என்பவற்றில் ஆய்வு நடத்தப்பட்டது;

இப்பகுதிகளில்காணப்பட்ட வெற்றுப் பாத்திரங்கள் ரயர், சட்பாத்து, பொலிஸ்பண்ணும் ரின், உடைந்த மண்பாத்திரங்கள், போத்தல்கள், பூச்சாடி, சீமெந்துத் தொட்டி, ரியூப் ஓட்டை பார்க்கப் பாவிக்கப் படும் பற்றிப் பெட்டி ஆகியவற்றில் தேங்கியிருந்த நீரிலேயே நுளம்புகள் மற்றும் குடம்பிகள் காணப்பட்டதாகவும்,

இவ்வாறான பொருட்கள் சூழலில் காணப்பட்டால் நீர் தேங்கவிடாது பார்த்து உயிர் கொல்லி டெங்குக் காய்ச்சலில் இருந்து பாதுகாப்புத்தேட வேண்டும் எனவும் நெல்லியடி பொதுச் சுகாதாரபரிசோதகர் சூஇளங்கோ சம்பந்தப்பட்ட பகுதி மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

(உ)

# நோர்வே அரசு கவிழும் அபாயம் எதிர்க்கட்சி ஆதரவால் நீங்கியது

(ஒஸ்லோ)

நோர்வே அரசு அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதில் எதிர்க் கட்சிகளுடன் இணக்கம் கண்டதையடுத்து ஆளும் கூட்டணி பதவியிழக்கும் அபாயம் நீங்கியுள்ளது. 165ஆசனங்களைக் கொண்ட நோர்வே பாராளுமன்றத்தில் ஆளும் கூட்டணி 62ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ளது. இதனால் ஆளும் கூட்டணியின் பதவி நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருந்தது.

தற்போது நோர்வேயின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள தேவையான 25வாக்குகளை வழங்க எதிர்க்கட்சிகள் முன்வந்துள்ளன. அத்துடன் ஓய்வூதியத் திட்டம், வரித் தளர்வு ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் அவர்களிடையே இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆளும் கூட்டணியின் பதவி கவிழும் அபாயம் நீங்கியுள்ளது என்று நோர்வேயின் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு உதவி வழங்கும நாடுகளின் மாநாடு ஒஸ்லோவில் நடை பெறவிருக்கும் இவ்வேளையில் நோர்வேஅரசுக்கு ஏற்படவிருந்த அபாயம் நீங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது. மேலும் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டமைக்கும் இவ்விரு தரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள முன்னெடுக்கப்படுவதற்கும் நோர்வே அரசே உதவி வழங்கிவந்துள்ளதும் நினைவில் கொள்ளத்தக்கது. (பி-2)

# கொளத்தூர்மணி வராவிட்டால் நாகப்பா கொலை செய்யப்படுவார்

## கர்நாடகத்துக்கு வீரப்பன் மீண்டும் மிரட்டல்

(புதுடில்லி)

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை கொலை செய்யப் போவதாக சந்தனமரக் கடத்தல் வீரப்பன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாகப்பாவின் குடும்பத்தினருக்கு வீரப்பனால் ஐந்தாவதாக நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஒலிநாடாவில் இந்த எச்சரிக்கை விடுக்கப்படடிருந்தது அந்த ஒலி நாடாவில் நாகப்பா விடயம் குறித்து பேசுவதற்கு கொளத்தூர் மணியை இன்னும் 12நாட்களுக்குள் தன்னிடம் அனுப்பி வைக்க வேண்டும் என காலக்கெடு ஒன்றை விதித்துள்ள வீரப்பன் அவ்வாறு அனுப்பத் தவறினால் நாகப்பாவை கொலை செய்யப் போவதாகவும் அச்சுறுத்தியுள்ளார்.

மேலும் சிறையில் இருக்கும் கொளத்தூர் மணியை அனுப்புவதில் சட்டச் சிக்கல்கள் உள்ளதென கர்நாடக அரசு கூறிவருவதை தான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் வீரப்பன் அறிவித்துள்ளார்.

இதே வேளை, ஐந்தாவது ஒலி நாடா விடயம் குறித்து அறிந்த கர்நாடக முதலமைச்சர் எஸ். எம் கிருஸ்ணா உடனடியாக தனது உயர்மட்ட அதிகாரிகளுடன் கூட்டம் ஒன்றை நடத்தி நாகப்பாவை மீட்பது குறித்து உடன் தீர்மானம்



ஒன்றை எடுத்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றது. (பி-2)




# தென்னாபிரிக்கஅரசைக்கவிழ்க்க வெள்ளையர் குழுக்கள் சதி

(ஜோஹன்னர்ஸ் பேர்க்)

தென்னாபிரிக்காவில் தற்போது பதவியிலிருக்கும் கறுப்பு இனத்தவர் அரசாங்கத்தை வீழ்த்தி விட்டு வலது சாரி வெள்ளையர் ஆட்சியை ஏற்படுத்துவதற்கு சதி நடப்பதான சந்தேகத்தில் தென்னாபிரிக்க பொலிஸார் பெரும் எடுப்பில் தேடுதல்களையும் விசாரணைகளையும் நடத்தி வருகிறார்கள்.

இந்த வகையில் தலைநகருக்கு வெகுதொலைவில் உள்ள தோட்டமொன்றில் ஏராளமாக குண்டுகளையும் குண்டு செய்யும் உபகரணங்களையும் பொலிஸார் கண்டு பிடிப்பதாக அறிவித்துள்ளனர்.

சுமார் 26குழாய் குண்டுகளும் தன்னியக்க ரைபிள்களும் நூற்றுக்கணக்கான தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கீமோஸ் என்ற இடத்திலுள்ள சந்தப்பண்ணைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. ஹிட்டோரியாவில் அண்மையில் 9குண்டுகள் வெடிக்கப்பட்ட சம்பவத்துக்கும் இதற்கும் தொடர்பு உண்டா என்பதும் ஆராயப்படுகின்றது.

ஆயுத்தத்தின் மூலம் அரசைக் கவிழ்ப்பதற்கு திட்டம் தீட்டுபவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவும் தென்னாபிரிக்க மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் புலனாய்வு அதிகாரிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று தேசிய பொலிஸ் கமிஷனர் கூறினார். (பி)

## ஜப்பான் இளவரசர் மூச்சுத்திணறி மரணம்

(டோக்கியோ)

விளையாட்டரங் கொன்றில் மூச்சடங்கி வீழ்ந்த ஜப்பான் நாட்டு இளவரசர் டகமடோ பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஜப்பான் அரசாங்கம் இச்சம்பவத்தை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

47 வயதுடைய இவர் ஜப்பான் முடியரசர் இளவரசர் பட்டியலில் 7 வது இடத்தை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பி-4)

# இஸ்ரேலில்ஊடகவியலாளர் பொலிஸாரால்தாக்கப்பட்டார்

## சர்வதேச சம்மேளனம் கண்டனம்

(ரெல்அவிவ்)

பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் ரோய்டர் புகைப்படப்பிடிப்பாளர் இஸ்ரேலியப் பொலிஸாரால் நேற்று முன் தினம் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பலஸ்தீன ஊடகவியாலாளரான 27வயதுடைய மழுனா வஸாவாஸ் இஸ்ரேலியப் பொலிஸாரால் அழைதத்துச் செல்லப்பட்டு எம் 16 ரகத் துப்பாக்கியால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் இஸ்ரேலியப் பொலிஸாரை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இவ் விடயம் குறித்து பூரண விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் ஊடகவியலாளர் பொலிஸாரால் தாக்கப்பட்டதற்கான காரணம் இது வரை தெரியவரவில்லை. (பி-2)

# அமெரிக்காவின் சொற்படி தென்கொரியா நடக்கிறது

## வட கொரியா குற்றச்சாட்டு

(பிஜாங்ஜோங்)

தென் கொரியா அமெரிக்காவின் ஆலோசனைக்கேற்பவே செயறபட்டு வருகின்றது என வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

தென் கொரியாவின கடல் எல்லைக்குள பிரவேசித்த வடகொரியாவின் கடற்படைக் கப்பல் ஒன்று தென் கொரியாவால் எச்சரிக்கை செய்யப்பட்டு தாக்கப்பட்டதையடுத்து வட கொரியா இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளது.

இதே வேளை,தென்கெரியா அண்மைக்காலத்தில் ஐந்து தடவைகள் வட கொரியா எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தது என்று வட கொரியா சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமட்டுமன்றி இரு நாடுகளுக்கு மிடையில் முறுகல் நிலை நிலவுவதை அமெரிக்கா விரும்பு வதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

## மற்றொரு இந்தியப் பயிற்சி விமானம் விபத்தில் சிக்கியது

(புதுடில்லி)

இந்திய வான்படைக்குச் சொந்தமான மற்றுமொரு பயிற்சி விமானம் தரையில் வீழ்ந்து சேதமாகியுள்ளது. இதேவேளை, அதிலிருந்த பயிற்றுவிப்பாளரும், பயிற்சியாளரும் பரசூட்மூலம் குதித்து உயிர்தப்பியுள்ளனர். ஆந்திர மாநிலத்தில் வயல் வெளியொன்றில் விமானம் விழுந்தமையால் வேறு எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை.

இந்திய போர்ப்பயிற்சி விமானங்கள் அடிக்கடி விபத்தற்குள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது. (பி-4)



# மாவீரர் புகழ் பாடுவோம்

## மேதினியில் வாழும் மிகுந்து

இன்னுயிரை ஈந்திட்ட ஈடற்ற ஈகத்தை
உன்னிடவே உள்ளமெலாம் உருகுதையா - மின்னலென
சாதித்த சாதனைகள் சரித்திரமே - சாவில்லை
மேதினியில் வாழும் மிகுந்து.

மண்ணுக்காய் மரணத்தை மணந்திட்ட மாவீரர்
எண்ணங்க ளெல்லாமே ஈடேறும் - திண்ணமிது
கண்ணாய் வளர்ந்தெடுத்த கருத்தான சுதந்திரத்தை
மண்ணென்றும் வாழ்த்தும் மகிழ்ந்து.

-கூத்தாடி-

## அழகு தமிழ் ஈழத்திற்காய் ஆவி தந்தீர்கள்

தாய் மடியில் பூத்திருக்கும் ரோஜாக்கள்- உயிர்
தந்து விழி உறங்குகின்ற ராஜாக்கள்
வாயெடுத்துப் பாடுகிறோம் உமை நினனத்து -உங்கள்
வாசலிலே வந்தழுதோம் இமை நனைத்து
நினைவில் வந்து பூக்கின்றீர் - எம்
நெஞ்சில் வீரம் சேர்க்கின்றீர்

விழிகளிலே நீர் வழிய நின்றழுதோம் - நீங்கள்
விழியுறங்கும் கல்லறை முன் வந்தழுதோம்
அழிவதில்லை உங்கள் பெயரே- இங்கு
அனலெனவே ஆனது நீர் தந்த உயிரே
வீசும் காற்றாய் வருவீர்கள் - நீங்கள்
விடியும் வெள்ளியில் தெரிவீர்கள்

வீரமுடன் போர்க்களத்தில் ஏறி நடந்தீர் - நீர்
வீழும் வரை ஈழம் என்றே கூறி நடந்தீர்
ஊருலகம் உங்கள் கதை பேசுதையா - விழி
உறங்கும் இல்லம் எங்கும் ஒளி வீசுதையா
சாரலாய் வந்தெமைத் தொடுவீர்கள் - வந்து
தொட்டதும் சென்றுமே விடுவீர்கள்

இளமைக்கால சுகங்களை தீயில் மூட்டினீர் - தமிழ்
இனத்தை அழிக்க வந்த எதிரிப் பேயை ஓட்டினீர்
அழகுத் தமிழ் ஈழத்திற்காய் ஆவி தந்தீர்கள் - நாம்
அழுது துடிக்க எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
பாடும் கவிதையில் இருப்பீர்கள்- சிறு
பூவின் இதழ்களில் சிரிப்பீர்கள்

– சுழிபுரம் வானவராயன் -

## விடியலைத் தந்த விடிவெள்ளிகள்

இன்னலும் இருளும்
சூழ்ந்திருந்த தமிழர்
வாழ்வதனை, - உங்கள்
உயிர்தனை விலையாக கொடுத்து
விடியலை தேடித்தந்த
மாவீரர்களே! - நீங்கள்
எம்மினத்திற்கு விடியலை தந்த
விடிவெள்ளிகள்

-எஸ். கவிதரன்-
சண்டிலிப்பாய்

## கார்த்திகை பூத்த மலர்கள்

ஆண்ட பரம்பரை மீண்டுமிங்கு
எழுந்தாண்டிட வேண்டுமென்றே
மூண்டபோர் பகையுடைத்து எம்
மண்ணில் சுதந்திர சுடரை ஏற்றிட விளைந்தவர்

இன்ம் வாழ தமையழித்த வர்த்திகள்
இதயத்தே இரக்கம் நிறைந்த கத்திகள்
தோன்றுமிந்த விடியலின் சக்திகள் - என்றும்
தமிழர் நெஞ்சத்தே வாழும் மூர்த்திகள்

கார்காலத்து இடிகள் - இவர்கள்
கார்த்திகை பு,த்த மலர்கள்
பார் போற்றும் பிள்ளைகள் - இவர்கள்
பேர் சொல்லும் கார்த்திகை இருபத்தேழு

-நெற்கொழுதாசன்-

## மாவீரர் மனிதனுள் தெய்வம்

பச்சைப் பயிருக்குள் பகை நுழைந்தது!
இத்தமிழ் மண்ணில் உயிர் குடித்தது!
அகிம்சையா யிருந்திட்ட தமிழ் மண்ணை .....
ஆக்கிரமித்தது.
ஆணவம் கொண்டது! ஆனந்தம் கொண்டது!
தமிழனின் வாழ்வினில் தீயிட்டது
பொறுமையை இழந்திட்ட தமிழன் பொங்கி எழுந்தான்
பகை, பன்னிரண்டடி தள்ளியே நின்றது
புலி விழித்தது பகை பயந்தது
புலியுடன் பகை போராடியது
பகை எரிந்தது, புலி சில விதையானது
மாவீரர் மண்ணிலே மலர்ந்தனர்.
மாவீரர் போராட்டம் மகத்தானது
மாவீரர் மனிதனுள் தெய்வம்

- கி.அ.தில்லைதாசன் -

# ஒஸ்லோவில் பெறப்படும் நிதியை சரியான நோக்கத்திற்கு பயன்படுத்துவது அவசியம்

## ஆசிய அபி.வங்கி இலங்கைப் பணிப்பாளர்

(கொழும்பு)

நோர்வேயில் நாளை நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளில் மாநாட்டின் நிதியினை பெற்றுக் கொள்வதில் எவ்வித சிரமமும் இருக்காது.

ஆனால், அம்மாநாட்டில் இருந்து கிடைக்கவுள்ள நிதியினை இலங்கையை கட்டியெழுப்பும் பொருட்டு எவ்வாறு பயன்படுத்துவது என்பதே முக்கிய விடயமாகும்.

இவ்வாறு ஆசியஅபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பணிப்பாளர் ஜோன் கூனி தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான பெருமளவு நிதி இம்மாநாட்டின்மூலம்கிடைக்கும்.

கிடைக்கவுள்ள இந்நிதி மூலம் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேவை நிறையவே உள்ளது;

கடந்த காலங்களில் பல அமைப்புக்களினாலும் வெளிநாட்டு நிறுவனங்களினாலும் இலங்கைக்கு உதவி பெற்றுக் கொள்ளப்பட்டு வந்த போதிலும் இம்மாநாட்டின் மூலம் பெறப்படவுள்ள நிதி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது எனவும் கூனி சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## மின்சாரம் வழங்கப்படும்

(திருநெல்வேலி)

பலவருடங்களாகமின்சாரம் வழங்கப்படாமலிருந்த அளவெட்டி, அராலி, உரும்பிராய், நிலாவரை, நீர்வேலி, மற்றும் புத்தூர் பிரதேசங்களுக்கு எதிர்வரும் வாரங்களில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

மின்சக்தி எரிபொருள் அமைச்சர்கருஜெயசூரியாவை ஈ.பி ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் சந்தித்து கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈ. பி. ஆர். எல். எவ். இன் யாழ். மாவட்ட செயலாளர் அ உதயகுமார் தெரிவித்துள்ளார். (ந- 43)

## மயிலந்தனைப் படுகொலை வழக்கின் தீர்ப்பு நாளை

(கொழும்பு)

மட்டக்களப்பு மயிலந்தனை மனிதப்படு கொலைகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பு நாளை திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

1992 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி புனானை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மயிலந்தனை தமிழ் கிராமத்தினுள் புகுந்து- 14 சிறுவர்கள உட்பட 35 பொது மக்களை படுகொலை செய்ததுடன் 9 பேரை காயப்படுத்தினர்.

இது தொடர்பான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில், நீதிபதி சிறிஸ்கந்தராசா முன்னிலையில் விசேட யூரர் சபைமுன் நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவ வீரர்கள் 18 பேருககு எதிராக சட்டமா அதிபர் சமலசபேன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்;

இவ் வழக்கு விசாரணை ஆரம்பத்தில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலேயே நடை பெற்றது;

எனினும், வழக்கு விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 18 இராணுவ வீரர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க இவ் வழக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் கடந்த மாதம் ஒக்டோபர் முதல் இடம் பெற்று வந்த விசாரணைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்தே நாளை தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. (உ-8)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சத்திய சேவாநிலைய இளைஞர்பிரிவு க. பொ. த (சா/த) மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்குகளைநடத்தவுள்ளது.

இந்த வகையில், இன்று முதல் மூன்று தினங்கள் முறையே ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாட வழிகாட்டல் கருத்தரங்குகள் காலை 9 மணி தொடக்கம் யாழ் சத்தியசாயிசேவாநிலையத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

# ஒஸ்லோ மாநாட்டில் பாலசிங்கத்தைப் பங்கேற்கச் செய்வதுதுரோகச்செயல்

## வண.மதுலுவவே சோபித தேரர் சீற்றம்

(கொழும்பு)

ஒஸ்லோமாநாடு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், உதவியை பெறும் நாடாகிய இலங்கையின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெறுவதாகும்.

இம் மாநாட்டில் எந்தவொரு நாட்டினதும் பிரதிநிதியாகவுமில்லாத புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எவ்வாறு கலந்துகொள்ள முடியும். அமைச்சர் ஜீ எல் பீரிஸ் என்ன தான் விளக்கங்களை முன் வைத்தாலும் அரசாங்கமானது, ஒரு பயங்கரவாத இயக்கத்தை கொள்கை வகிக்கும் அணியில் இணைத்துக் கொள்வது நாட்டிற்கு செய்யும் துரோகமாகும்;

இவ்வாறு, தேசிய சங்க சபாவின் தலைவர் வண. மதுலுவவே சோபிததேரர் கடந்த வியாழனன்று நடை பெற்ற செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது குறித்து தெரிவிக்கையில்; கௌரவமான சமாதானத்தை அடைவதற்கு தேசிய பொதுக் கருத்தின் அடிப்படையில் அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறான ஒரு ஐக்கிய முன்னணி ஒரு அரசியல் முன்னணியாகவன்றி தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

இன்னும் ஆயுதங்களைக் கைவிடாத புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வார்களானால் அது வேறாக கணிக்கப்பட வேண்டிய விடயம், எனத் தெரிவித்துள்ளார்.

இதே வேளை வடக்கு-கிழக்கின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் புலிகளின் கோரிக்கையை ஏற்று மீள்குடியமர்வுகளை செய்யக் கூடாது என்று அங்கு தேசிய பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் கூறியுள்ளார். (இ)

## வரவு-செலவு திட்டம் தொடர்பாக

# பிரதமர் நாடு திரும்பும் வரை முக்கிய முடிவுகள் எடுக்கப்படாது

## பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பும்வரை, அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தில் சர்ச்சைக்குரிய அம்சங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

இவ்வாறு பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நேற்று ஒஸ்லோ பயணமானார்.

தற்போது பாராளுமன்ற அவையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தின மீதான குழு நிலைவிவாதம் நடைபெற்று வருகின்றது;

இதனாலேயே வரவு செலவுத் திட்டம் குறித்த சர்ச்சைக்குரிய விடயங்களில் முடிவுகள் எவையும் நாட்டில் பிரதமர் இல்லாத வேளை எடுக்கப்படமாட்டாது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தெங்குப் பராமரிப்பு விளக்க குறிப்புவிநியோகம்

(யாழ்ப்பாணம்)

தெங்குப் பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பான விளக்கக் குறிப்புக்களை அச்சிட்டு தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை ஊடாக குடாநாடு முழுவதும் விநியோகிக்க விவசாய பீட தகவல் தொடர்பு மையம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதேவேளை லண்டனில் வதியும் திருநெல்வேலி வாசியான எஸ். அருளானந்தன் என்பவர் அன்பளிப்புச் செய்த 25 ஆயிரம் ரூபா மூலம், பொலநறுவையில் இருந்து 500 நல்லின தென்னம் பிள்ளைகளைத் தருவித்து அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியில் வைத்து எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்படி மையம் வழங்கவுள்ளது. (உ)

## தரம்-5 புலமைப் பரிசில் உதவித் தொகை வழங்கும் வருமான எல்லை உயர்வு

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசுப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, அரசாங்கத்தினால உதவிப் பணம் வழங்குவதற்கு கணிக்கப்பட்டு வந்த பெற்றோர் அல்லது பாதுகாவலரின் மாதாந்த வருமான எல்லை 2 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது,

கடந்த காலங்களில் புலமைப்பரிசுப்பரீட்சை சித்தியடையும் மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் மாதாந்த வருமானம் 500 ரூபாவாகவே கணிக்கப்பட்டு வந்தது.

இவ்வருமான எல்லை கடந்த 24 வருடங்களாக அமுலில் இருந்து வருகின்றமையால், காலத்துக்கு பொருந்தாத இம்முறையினை மாற்றி அமைக்க அரசு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாயகம் வி.கே. நாணயக்கார தெரிவித்துள்ளார்;

இத்திருத்தத்தின் பிரகாரம் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் உதவிப் பணம் வழங்கப்படும் போது பெற்றோரின் ஆகக் கூடிய வருமான எல்லையாக 2 ஆயிரம் ரூபா கணிக்கப்படவுள்ளது.

சமுர்த்தி திட்டத்தின் மூலமாக பெறப்படும் உதவிப் பணம் இவ்வருமான எல்லைக்குள் சேர்க்கப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (உ-8)

## ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக, திருமதி எஸ். என். ஈபத், பேராசிரியர் எம். ரி. ஏ. புர்ஹான், ஏ. பி. சற்குணசேகர, வணக்கத்துக்குரிய கலாநிதி சிலகந்தசத்வீர, கலாநிதி எச். எஸ். ஸ்ரீவன், கலாநிதி பி. எஸ். விஜியவீர் ஆகியோரும்,

பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களாக டி.எம்.பி வி தஸ்ஸநாயக்கா, பேராசிரியர் ஜே என். ஒவ் பெர்னாண்டோ, ரி ஏ. குணவர்த்தன, திருமதி ஜே. ஸ்மைல், திருமதி எம். மொகத்தால நிகானறகீம், பேராசிரியர் மெண்டிஸ் ரோகணதீர, ரி.சோம சேகரன் ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-8)

## சர்வதேச குற்றச் செயல் விசாரணை நீதிமன்றில்

# சந்தேக நபரை ஒப்படைப்பது பற்றிய உடன்பாட்டில் அமெ. இலங்கை கைச்சாத்து

(கொழும்பு)

சர்வதேச குறறச் செயல் விசாரணை நீதிமன்றத்துக்கு சந்தேக நபர்களை ஒப்படைப்பது தொடர்பான உடன்படிக்கை ஒன்றில் அமெரிக்காவும் இலங்கையும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளன.

குறிப்பிட்ட ஒரு சந்தேக நபரை, அவரது நேரடி, இணக்கத்தைப் பெறாமல் சொந்த நாட்டில் இருந்து சர்வதேச குற்றச் செயல் விசாரணை நீதிமன்றத்திடம் கையளிப்பதில்லை என்பது குறித்தே இரு நாடுகளும் உடன்படிக்கை செய்துள்ளன.

இனக் கொலை புரிந்தவர்கள், மனித நேயத்துக்கு எதிரான மற்றும் யுத்தக் குற்றங்களை புரிந்தவர்கள் ஆகியோரை நீதியின் முன் நிறுத்துவதே இவ் உடன்படிக்கையின் நோக்கமாகும்;

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸும் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்; (உ-8)

சுற்றத்தாற் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்
குறள்

# வலம்புரி

## நிதி உதவியின் அவசியம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நாளை ஒஸ்லோவில் நடைபெற இருக்கிறது. அரசும் விடுதலைப் புலிகளும் கூட்டாக இக்கூட்டத்தில் கலந்து கொள்வது, புதியதொரு அத்தியாயமாக அமைகிறது.

வெளிநாடுகளிடம் பெறப்பட்ட நிதியுதவியைக் கொண்டு வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகம் மீது குண்டு வீசப்பட்டது. அதன் மூலம் தமிழர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டன. ஆயினும் இது விடயத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

இத்தகையதோர் சூழ்நிலை மாற்றமுற்று எந்த நாடுகள் வழங்கிய நிதி உதவி மூலம தமிழர்களின் வடக்குக் கிழக்குத் தாயகம் அழிக்கப்பட்டதோ அதே நாடுகளின் நிதி உதவி மூலம் அழிக்கப்பட்டவற்றை புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது, ஓர் புதிய அத்தியாயத்திற்கான அடிப்படையாகும்.

அரசும், விடுதலைப் புலிகளும் கூட்டாகக் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் பங்குபற்றுவது இனப் பிரச்சினைக்கான தீர்வில் இருதரப்பும் விலக முடியாதவாறான ஓர் இறுக்கத்தை ஏற்படுத்துமென்பது உறுதி. இதேநேரம் உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு முன்னதாக இனிமேல் இருதரப்பும் யுத்தம் செய்யக் கூடாதெனவும், நோர்வேயின் அனுசரணையுடன் இருதரப்பும் பேச்சு நடத்தி சமாதானமான முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் எனவும் வலியுறுத்துவதுடன், இது விடயத்தில் அரசு-புலிகளின் எழுத்து மூலமான உறுதிப்பாட்டையும்பெற்றுக்கொள்ளவுள்ளன.

எனவே நாளை ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமானது, தனித்து நிதியுதவியுடன் மட்டும் நின்று விடாமல் இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்தத்தை சர்வதேசரீதியில் இருதரப்புமூலமும் தெரியப்படுத்த வைப்பதும் நோக்கமாக அமைகிறது.

# அன்பு நிறைந்த லூர்துநாயகி புனித நீரினால் மக்களின் பிணிதீர்த்து வைக்கிறாள்



## பரமபிதா காட்டிய பாதை

தன்னிடம் வருகின்ற கோடானு கோடி மக்களின் குரல் கேட்டு, அருள் வளமீந்து, நோய்பிணி தீர்த்து அன்புடன் அரவணைத்துக் கொள்ளும் அன்னை லூர்து அன்னை. யார் இந்த லூர்து அன்னை? பிரான்ஸ் நாட்டிலே அதன் தென் மேற்குப் பகுதியிலே அமைந்துள்ள மலைப் பாங்கான ஓர் இடம் லூர்து. அங்கு அமைந்துள்ள மசபீல் என்ற குகையிலே சிறுமி பெர்ணதெத்திற்கு காட்சி கொடுத்த அன்னையே லூர்து அன்னை ஆவார்.

### சிறுமிக்கு காட்சி

1958 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 11 ஆம் நாள் பதினான்கு வயது நிரம்பிய சிறுமி பெர்ணதெத், பதினொரு வயது நிரம்பிய தன் சகோதரி ரொயினெற், நண்பி ஜீன் அபடீ ஆகியோருடன் 'கேவு' என்ற சிற்றாற்றின் அக்கரைப் பகுதிக்கு விறகு எடுப்பதற்காகச் சென்றாள். அந்த இடத்தை அடைவதற்கு மசபீ என்ற குகையை கடக்க வேண்டியிருந்தது. பெர்ணதெத் நோய்வாய்ப்பட்ட சிறுமி. அவளைப் பொருட்படுத்தாது ஏனைய இரு சிறுமியரும் விரைவாக நடந்து சென்று ஆற்றின் அக்கரையை அடைந்தார்கள். சிறுமி பெர்ணதெத்ஆற்றைக்கடக்க முற்படும் போது திடீரென அங்கு எழுந்து காற்றின் இரச்சலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். ஆற்றின் அக்கரைப்பகுதியில் நின்ற மரங்கள் அசைவற்று நின்றன. ஆனால் குகையின் அருகில் நின்ற மரத்தின் கிளைகள் அசைந்து கொண்டிருந்தன. ஆயினும் அவற்றைப் பொருட்படுத்தாது சிறுமி ஆற்றைக் கடக்க மீண்டும் முயற்ற போது, மீண்டும் காற்றின் இரைச்சல் எழுந்தது. அதைக்கேட்ட சிறுமி திரும்பிப்பார்த்தாள். குகையை உற்று நோக்கினாள்.

அந்தோ'ஒரு பெண் வெண்ணிற ஆடையுடன் தோன்றினாள். இடையிலே நீல நிறப் பட்டாடை கட்டியிருந்தாள். அவள் கரத்திலே மஞ்சள் நிற செபமாலை தொங்கிக் கொண்டிருந்தது. தன் தலையை சிறிது தாழ்த்தி என்னை வாழ்த்தினாள்.

'வார்த்தைகளினால் விபரிக்க முடியாத அழகுள்ள பெண்' என்று பின்னாளில் இக்காட்சியைபபற்றி சொல்லும் போது பெர்ணதெத் சொல்கிறார்.

அச்சமடைந்த சிறுமி தன் செபமாலை எடுத்து முழந்தாள் பிடியிலிருந்து செபிக்க ஆரம்பித்தாள் 'அந்தப்பெண்ணும்' தன் கையிலிருந்த செபமாலையை உருட்டினாள். ஆனால் 'அவள்' உதடுகள் அசையவில்லை செபமாலையை சொல்லி முடிந்தபின்.எந்தஒருஉரையாடல்களும இல்லாமல் 'அந்தப் பெண் மறைந்து போனாள்.

வேண்டும்; எனக்கு இங்கு ஒரு கோவில் கட்ட வேண்டும என்று குருக்களிடம் போய்ச் சொல். மக்கள் ஊர்வலமாக வரவேண்டும், செபம் செய்ய வேண்டும். தவறுகளை உணர்ந்து வருந்தி திருந்தி வாழ வேண்டுமென்று சொல் ------- அதோ அந்த ஊற்று நீரை அள்ளிக்குடி ---- அதில் உன்னைக் கழுவிக் கொள், இவை எல்லாம அந்தக் காட்சிகளில் மரியன்னை பெர்ணதெத்துக்கு கூறிய வார்த்தை தான்

### பிணி தீர்க்கும் நீர்

அதோ அந்த ஊற்று நீரை அள்ளிக்குடி என்று தேவமாதா சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு ஊற்று இருந்தது முன்னர் யாருக்கும் தெரியாது. பெர்ணதெத் அந்த இடத்தில் வெறும் கையால்

அருட்திரு
**எஸ். றெக்ஷ்சவுந்தரா**

பெர்ணதெத்தை காணாததால் திரும்பி வந்த சிறுமிகள் இருவரும் முழந்தாட்படியிட்டிருந்த பெர்ணதெத்தைக் கண்டு ஏழனம் செய்தார்கள்.

### அமல உற்பவ அன்னை

செய்தி பரவியது அவருடைய பெற்றோர் முதலாக பெர்ண தெத் கூறிய செய்தியை எவரும் நம்பத் தயாராக இருக்கவில்லை. பலத்த எதிர்ப்புக்கள் மத்தியிலும் சிறுமி மசபீல் என்ற குகைக்குச் சென்று வந்தாள். அவளுடன் கூட மக்களும் கூட்டம் கூட்டமாகச் செல்ல ஆரம்பித்தார்கள். 'அந்தப் பெண்' மீண்டும், மீண்டும் பெர்ண தெத்துக்கு அதே இடத்தில் காட்சி கொடுத்து வந்தாள். இவ்வாறு 18 தடைவைகள் 'அந்தப்பெண்' சிறுமிக்கு காட்சி கொடுத்தாள். 'வார்த்தைகளை இருவரும் பரிமாறிக் கொண்டனர். இங்கேயே 'அந்தப் பெண்' 'நாமே அமல உற்பவம், என்று தன்னை வெளிப்படுத்தினாள். 'இங்கு தினசரி இரண்டு வாரங்களுக்கு நீ வர

அகழ்ந்த போது ஒரு விரல் பருமனுக்கு ஊற்று நீர் கொப்பளித்துக் கொணடு வந்தது. அது விரைவில் ஒரு சிற்றோடையாக ஓட ஆரம்பித்தது. அந்த புனித ஊற்று நீர் தான் பல பிணிகளைத் தீர்த்து பெருமை பெற்றது.

நாளுக்கு நாள் அங்கு செல்லும் மக்கள் கூட்டம் பெருகியது. சிறு கோயில் கட்டி மெழுகு வர்த்திகள் ஏற்றி வைத்து மக்கள் செபித்து வந்தார்கள். ஏனையவர்கள இதனைப் பரிகசித்தார்கள். அரச அதிகாரிகள் எதிர்த்தார்கள் அப்போது தான் அங்கு அற்புதங்கள் ஆரம்பமாகின. ஊற்று நீரிலே முகம் கழுவிய ஒரு குருடனுக்கு பார்வை கிடைத்தது. பெர்ண தெத் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரி சாகக் கிடந்த தன் குழந்தையைஊற்றுநீரில் தோய்த்து எடுத்தாள் குழந்தை பிழைத்துக் கொண்டது: எல்லாத் திசையினின்றும் அங்கு நோயாளிகள் வரத் தொடங்கினர். அவர்கள் குணமடைந்தனர்.

### ஆராய்வில் தோல்வி

இந்த வேளையில்; சந்தேகப்பட்டவர்கள் சிலரை அடங்கிய குழு அமைக்கப்பட்டு இதனை ஆராய முன்வந்தது நான்கு வருடத் தீவிர விசாரணையின் பின் அந்தக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டது காட்சியில் பெர்ணதெத் சொன்னது யாவும் உண்மை யென்றும் அற்புதமாக பல பிணி தீர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அவற்றுக்கு விஞ்ஞான பூர்வமான மருத்துவ விளக்கம் சொல்ல முடியவில்லை என்றும் அறிவித்தது

இதன் காரணமாக இந்த உலகப்புகழ் பெற்ற ஒரு திருத்தலமாக லூர்து நகரம் விளங்குகின்றது பல லட்சம் மக்கள இந்தத் திருத்தலத்தை தரிசிக்கிறார்கள். சாதி, மத, பேதமில்லாமல் வருகிறார்கள் தங்கள் நோய் நொடி வலி வேதனை யாவும் தீர வேண்டுமென்று மக்கள் வருகின்றனர் மனப் பிரச்சினைகளால்வருகின்ற சில்லறை நோய்கள் தான் குணமாகின்றதே என்ற சந்தேகம், வரலாம், அதற்கு இடமில்லை, எலும்புருக்கி நோய், நீரிழிவு நோய், காசம் குருடு ஆறாத புண் போன்ற நாள்பட்ட நோய்கள் அங்கு குணமாகின்றன.

இதைக்கேட்டு வைத்தியர்கள் ஏளனம் செய்த காலம் மலையேறி விட்டது இன்று பல்லாயிரக்கணக்கான வைத்தியர்கள் இந்த பிணி தீர்வுகளை கண்டறிய உலகமெங்கும் திரண்டிருக்கிறார்கள் இந்தப் புதுமையை கண்டு பல்லாயிரம பேர் மனம்மாறியுள்ளனர் நாஸ்திகர்கள் கடவுளை ஏற்றுக்கொண்டனர். பிரிந்து சென்ற சகோதரர்கள் மீண்டும் கத்தோலிக்கத் திருமறையில் சேர்ந்துள்ளனர். சாட்சியம் பகர்ந்துள்ளனர்.

### நம் மண்ணின் தலங்கள்

யாழ். மண்ணிலும் லூர்து அன்னையை நாடும் பக்தர்கள் ஆயிரமாயிரம் தும்பளையிலும் மாதகல் கடற்கரையிலும் யாழ். நகரின் கோயில் வீதியிலும் துண்டிக்கடற்கரையிலும் மட்டுவில் தென்னஞ்சோலையிலும் பள்ளி கொண்டு எழுந்திருக்கும் லூர்து அன்னை தன்னிடம் வரும் பக்தர்களை ஆதரித்து அவர்களுக்காக இறைவனிடம் மண்டாடுகிறாள்.

## தினசரி தியானம்

### தெய்வீகப் பண்பாடு

கடவுளுடன் ஐக்கியமாகிற பக்தர் யாரிடமும் பகைமை எண்ணம் கொள்ள மாட்டார். எல்லோரையும் அவர் நேச உணர்வுடனேயே பார்க்கிறார், பரிவுடன் பார்க்கிறார். தன்னை மதிப்பது போலவே பிறரை அவர் மதிக்கிறார். எந்த ஒரு உயிரையும், தனக்குத்துன்பம் தரும் உயிரையும் கூட அவர் வெறுப்பதில்லை. துயரப்படுவோரிடம் இரக்கம் காட்டி அவர்களது துயர் துடைக்க முயல்பவரே கருணையுள்ள மனிதர் ஆவார். துயரப்படுவோரது நிலையில் தன்னை வைத்துப் பார்த்து, அவர்களது துயரங்கள் தமக்கு நேரிட்டவை என்று உணர்கின்றார்; இந்த இரக்கம் என்பதுவே தெய்வீகப் பண்பாடு ஆகும்.

சுவாமி சிவானந்தர்.

## வீடுகளுக்குள் வெள்ளம் 80 குடும்பங்கள் பொது இடங்களில் தஞ்சம்

(சண்டிலிப்பாய்)

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததையடுத்து சாவல்கட்டு கிராமத்தைச் சேர்ந்த 80 குடும்பங்களைச் சேர்ந்த 265 பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் பலபேர் அடங்குவர் என அறியப்படுகிறது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர் என். வேதநாயகன் அவர்களின் குறைநிறைகளைக்கேட்டறிந்ததுடன், அவர்களுக்கு சமைத்து உணவு வழங்கவும நடவடிக்கை எடுத்துள்ளார்.

மழை வெள்ளம் காரணமாக இப்பகுதியில் 3 முன்பள்ளிகள், இரு கோவில்கள், வைத்தியசாலை என்பன செயலிழந்துள்ளதாகவும்,

நீர் வழிந்தோடுவதற்கேற்ற வடிகால்கள் அமைக்கப்படாமையே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-258,201)

## விண்ணப்பம் கோரல்

(கல்வியங்காடு)

திறந்தபல்கலைக்கழகயாழ். பிராந்திய நிலையத்தில்எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் இம் மாதம் 30ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ- 54)



படம் : வே.தவச்செல்வன்

## இலங்கைக்கு....

தொடர்பாக இம் மாநாடு கூட்டப் பட்டிருந்த போதும் அரசியல் ரீதி யாகவும் இம்மாநாடு முக்கியத்து வம் பெற்றுள்ளதாக வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

மூன்று அமர்வுகளில் இடம்பெற வுள்ள இம் மாநாட்டில் இலங்கைக்கு பொதுவான நிதியுதவி வழங்குவது தொடர்பாக முதலாவது அமர்விலும், வடக்கு கிழக்கிற்கான நிதியுதவி வழங்குவது இரண்டாவது அமர் விலும் இடம்பெறும். இதனை அடுத்து உதவி வழங்கும் நாடுகள் தமது நிலைப்பாட்டை மூன்றாவது அமர்வில் தெரிவிப்பார்கள்.

நாளை நடைபெறவுள்ள ஒஸ்லோ மாநாட்டில் இலங்கை அரசின் பிரதி நிதிகள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில்நேற்று ஒஸ்லோ புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வுடன் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச் சர் நூர்தீன் மசூர், பிரதமரின் சமா தானச் செயலணிச் செயலர் பேணட குணதிலகா, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, வெளிநாட்டமைச்சின் செயலாளர் நிகால் ரொட்றிக்கோ, வெளிநாட்டுத் தூதுவர்களாக கடமையாற்றும் வி.கே.வாசன், சப சிங்கா ஆகியோரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நேற்று ஒஸ்லோ பயணமானார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் புனர்வாழ்வு நிபுணர் ஜோஜ்.மகேஸ்வ ரன் ஆகியோரும் இம் மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக் கத்தை தடைசெய்திருக்கும் அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாட்டுப் பிரதிநிதி களும், ஒரே மேடையில் சரிசமமாக இருந்து பேச்சுவார்த்தை நடத்துவது முக்கிய அம்சமாகும். (ம)

## பனை. அபி. சபையின் புதிய பணிப்பாளர்கள்

(கொழும்பு)

பனை அபிவிருத்திச் சபையின் புதிய பணிப்பாளர்கள் நியமனம் பெற்றுளார்கள்.

இதன் தலைவராக எஸ்.சிவபா தமும், பணிப்பாளர்களாக கே.பரம லிங்கம், இ.ஆறுமுகம், ஆர். பேரி ன்நாயகம், எம். சோமசுந்தரம், பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், ஏ.எஸ்.எம். பஸமி ஆகியோரும் நிய மனம் பெற்றுள்ளார்கள். (வ)

## யாழில் 2ஆயிரம்......

அதேயளவு நிறை கொண்ட பவு ணும் மீளளிக்கப்பட்டது.

இதேவேளை இவ்வருடம் தமி ழீழ மீட்பு நிதி மீளளிப்பின் கீழ் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 2ஆயிரத்து 500பேர் தெரிவு செய்யப்பட்டுள் ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## கனேடியத் தூதுவர்...

பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான கனேடியத்தூதுவர் லேமேன், கனேடிய அரசின் ஆலோசகர் ஒல்க்கிளிறோ, கனடாவின் கண்ணிவெடியகற்றும் குழுவைச்சேர்ந்த மொறிட் பிறேல், கேணல் மைக்றைட், கேணல் பாலின், ஜோர்ஜ்வில்லியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)

## அதியுயர் பாதுகாப்பு...

ஏற்படுவதற்கு மேலும் சில காலம் பிடிக்கும். இந்நிலையில் தற்போதய இராணுவப் பாதுகாப்பு அரண்களில் மாற்றம் ஏற்படும்வரை இராணுவத் தினரின் எண்ணிக்கையிலும், அவர் களது பாதுகாப்பு கடமைகளிலும், மாற்றங்கள் ஏற்பட மாட்டாது. பாது காப்பு நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டால்தான் இராணுவத்தினரின் எண்ணிககையிலும் மாற்றம் ஏறப டும். புதிய சமாதான சூழ்நிலை உரு வாகும் போது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் அற்றுப் போக இதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பொதுமக்களின் இருப் பிடங்கள், பயிர்ச்செய்கை நிலங் கள் ஆகியவற்றை அவர்கள் இழந்துள்ளார்கள் என்பதை நான் நன்கு அறிந்துள்ளேன், அவற்றை நான் ஒத்துக் கொள்ளுகிறேன் என்றும் சரத்பொன்சேகா தெரி வித்தார் .

தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் மேற் கொண்டுள்ள அரசியல் வேலைத் திட்டங்கள் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மேஜர் ஜென ரல் சரத்பொன்சேகா தமிழீழ விடுத லைப்புலிகளுக்கு அரசியல் வேலைத் திட்டம் ஒரு புதிய அனுபவமாகும். அதில் மக்களையும் இணைத்துக் கொண்டு செயற்பட முனைகிறார் கள். விடுதலைப்புலிகள் செய்வ தெல்லாம் நூற்றுக்கு நூறு வீதம் சரியென ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்களும் சில தவறுகளை விடு கிறார்கள். அதே நேரம் சரியான வற்றையும் செய்கிறார்கள். இது அவர்களுக்கு ஆரம்பம் என்பதினால சில குறைபாடுகள் இருந்தாலும் அவர்களது நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கை வைக்கலாம்.

### மந்தகதியில் கண்ணிவெடி அகற்றும் பணி

இராணுவ பொறியியல் பிரி வைச் சேர்ந்த 50சதவீதமானோர் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடு பட்டுள்ளனர் எனினும் கண்ணிவெடி யகற்றும் பணி மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றது.

பொது மக்கள் வாழும் பகு திகளில் கண்ணிவெடிகள் அகற்றப் பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் அவசரமாகவும், குறுகிய காலத்துக்குள்ளும் இக் கண்ணிவெடிகளைப் புதைத்துள் ளார்கள். விடுதலைப்புலிகளிடம் அது பறறிய விபரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

விடுதலைப்புலிகள் கப்பம் அற விடுவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ள போதும், அவர்கள் தங்களது சில நடவடிக்கைகளுக் கான செலவுகளை பொது மக்கள் ஏற்க வேண்டும் எனக் கருதுகின்றார் கள். இது அவர்களது அரசியல் நிலைப்பாடு என்பதால் இதனைக் கப்பம் பெறும் செயல் எனத் தற் போது கூறமுடியாது.

அவர்களது அரசியற் கொள் கை தீர்மானிக்கப்பட்ட பின்பே இது தொடர்பாக கருத்துக் கூற முடியும்.

### நெடுந்தீவுச் சம்பவத்தில் இராணுவம் தலையிடாது

நெடுந்தீவுச் சம்பவத்தில் இரா ணுவம் தலையிடமாட்டாது. அரசி யல் களத்தில் அதிகாரமற்றவர்கள் மீது அதிகாரம் உள்ளவர்கள் அதிகாரத்தை திணிக்க முற்படுகிறார் கள். இந்நிலை தெற்கில் மட்டு மல்ல வடக்கிலும் இருக்கின்றது, என்பதை நெடுந்தீவுச் சம்பவம் காட்டுகின்றது. இதுதான் ஆசியா வின் தற்போதய அரசியல் நிலை இதனை ஒரு குறைபாடாகக் கருத முடியாது. நெடுந்தீவில் ஈ.பி.டி.பியி னர்மீது விடுதலைப்புலிகள் அரசி யல் அதிகாரத்தை திணிக்க முற் படுகிறார்கள். இது அரசியல் விவகாரம் என்பதால் இராணுவம் இதில் தலையிட மாட்டாது என்றும் மேஜர்ஜெனரல் சரத்பொன்சேகா அப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (ம)

## பிரதமர் ரணில்..........

நாளை திங்கட்கிழமை "ஒஸ்லோ" உதவி வழங்கும் மாநாடு ஆரம்பிக்க முன்ன தாக காலை 8.30 மணியளவில் நோர் வேப்பிரதமரை சந்தித்து உரையாடவுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ம)

## நெடுந்தீவிற்கான....

கொண்டு செல்லும் வகையிலேயே இப்படகுச் சேவை ஆரம்பிக்கப்படு வதாகவும் படகுச் சேவை ஒன்றை ஆரம்பித்து தம்மை நெடுந்தீவிற்கு அனுப்பி வைத்து உதவுமாறு 41 பொதுமக்கள் தம்மிடம் கேட்டுள் ளதாகவும் ஈ.பி.டி.பியின் யாழ் அலு வலகத்தினர் நேற்ற தெரிவித்தனர்.

நாளை காலை 9.00மணிக்கு ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் ஆலய இறங்கு துறையில் இருந்து புறப்படும் படகு குறிகட்டுவான் ஊடாக நெடுந்தீவிற்குச் செல்லும் என்று தெரிவிக்கப்படுகின்து. (இ)

## ரெலிகொம் பங்கு விற்பனை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் 200மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை பொதுமக்களுக்கு விற் பனை செய்யவுள்ளது.

பங்கொன்றின் முகப்பெறுமதி 15ரூபா ஆகும், பங்கு விற்பனை முகவராக இலங்கை வங்கி செயற் படுகிறது.

பங்கு விநியோகம் எதிர்வரும் 28ந்திகதி முதல் ஆரம்பிக்கப்படுமென் றும், பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் விண்ணப்பங் களைப் பூர்த்தி செய்து. அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்மென்றும் இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை முகாமையாளர் எஸ்.விக்ன ராஜா தெரிவித்துள்ளார். (இ-7)

## பருத்தித்துறை.....

இவ் இணக்கப்பாடு தொடர்பாக ஆராய இன்று தென்மராட்சியிலுள்ள 55வது படையணியின் தலைமைய கத்தில் கடற்றொழி லாளர்களுட னான சந்திப்பொன்றை இராணுவத் தரப்பு ஒழுங்கு செய் துள்ளது.

மேற்படி பகுதிகளில் எதிர்வரும் 28ம் திகதிக்குள் மீளக்குடியமர இராணுவம் அனுமதிக்காத சந்தர்ப் பத்தில் வெகுஜனப் போராட்டம் நடத் தப்படுமென பருத்தித்துறை கடற் றொழிலாளர் கூட்டடுறவுச் சங்கம் எச்சரிக்கை விடுத்திருந்ததும் குறிப் பிடத்தக்கது. (ந-5)

## கொடிகாமத்தில்..........

இச்சம்பவத்தின் போது உறங்கிக் கொண்டிருந்த இரண்டு பிள்ளை களும் தாயாருமே காயமடைந் தவர்களாவர்.

காயமடைந்த கந்தசாமி சாந்தா (வயது 40) அவரது பிள்ளைகளான துஸ்சங்கர் (வயது 17), குபேந்தினி (வயது 14) ஆகிய மூவரும் சிகிச் சைக்காக யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். (இ)


## ஆட்கள் தேவை

அலுவலகத்தை துப்புரவு செய்வதுடன் தேநீர் தயாரித்து வழங்கக்கூடிய (இரவுக்கடமை) சிற்றூழியர்கள் தேவை. 28.11. 2002 வியாழன் பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும் .

வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.



## மாவீரர் நினைவாலயம்

### திறப்பு விழா அழைப்பு

காலம்:- நாளை 25.11.2002

இடம்:- கோவிந்தன் கடைச்சந்தி, கிளிநொச்சி.

நேரம்:- முற்பகல் 11.30மணி

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர், ஏனையமக்கள் போராளிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சாள்ஸ் அன்ரனி*
*சிறப்புப் படையணி*
*போராளிகள்*

[C/5293]



## பிள்ளைகள் குறித்து பொறுப்புடன் நடப்போம்

### "இவர்கள் குறித்து விழிப்புடன் இருப்போம்"



சிறுவர் சிறுமியர் மீதான பாலியல் அடாவடிகள் நீங்கள் நம்பிக்கைக்குரியவர்கள் எனக் கருதும் உங்கள் அயலில் உள்ளவர்களாலேயே அதிகம் நிகழ்த்தப்படுகின்றது.

இப்பாலியல் துஷ்பிரயோகங்களை வெறும் சம்ப வங்களாக எண்ணி மறந்துவிடமுடியாது. சிறிய வயதில் ஏற்படும் இவ் அருவருக்கத்தக்க அனுபவங்கள் சிறுவர் களின் எதிர்கால வாழ்க்கையிலும் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்கிறார்கள் உளவியலா ளர்கள். ஆதலால் இவர்கள் குறித்து விழிப்புடன் இருப் போம்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

மாவட்ட சிறுவர்பாதுகாப்புக் குழு,
அறை எண். 30,
யாழ் போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

*விளம்பர அனுசரணை-*
SC(UK)

[C/5292]


## மரண அறிவித்தல்

### திருமதி. சிறிநாதன் கெங்காதேவ

காரைநகர் நாவலடிக்கேணியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறிநாதன் கெங்காதேவி நேற்று (23.11.2002) கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சிறிநாதனின் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அருமை மனைவியும், ஒரே ஒருபெண் மகவின் அருமைத்தாயா ரும், பேரம்பலம் லீலாதேவி தம்பதியினரின் அன்பு மகளும், கௌரிதேவி, தவமணிதேவி, கமலாதேவி, மயூரன், துவாரகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மார்க்கண்டு இராசம்மா தம்பதி யினரின் அன்பு மருமகளும், மங்கையற்கரசி, மகேஸ்வரி (டென் மார்க்), தனலட்சுமி (கொழும்பு), சறோஜாதேவி (ஆசிரியை கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் வித்தியாலயம்), சிறிதரன், சந்திரன் (லண்டன்), விஜியகலா ஆகியோரின் மைத்துனியும், தில்லைநாதன், கிருபா னந்தன் (டென்மார்க்), யோகநாதன் (கொழும்பு), மகேஸ்வரன் (இந்து கலாசார அமைச்சர்) ஆகியோரின் சகலியும், சுதன், நிவாஷினி (டென்மார்க்), பவதாரணி,பிரணவன், பவித்திரா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002) ஞாயிற் றுக்கிழமை மு.ப. 11.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
மா.சிறிநாதன (கணவர்)
(உரிமையாளர் மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்)
212. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாவலடிக்கேணி
காரைநகர்.

[C/5294]

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச சபையில் கடமைபுரியும் திரு.யோன அவர் களின் அன்புத்தாயார்

### கதிரவேலு பிலிப்பம்மா

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன் னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
நல்லூர் பிரதேச சபை.

[6226]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 24.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.